# பயம் பற்றிய நேரடி உரை



வேதவசனத்தின் வல்லமையால் உணர்ச்சிப்போராட்டங்களை எதிர்கொள்ளுதல்!

ஜாய்ஸ் மேயர்

*முன்பதிப்பு: எனக்குதவுங்கள் நான் பயந்திருக்கிறேன்!*

# பயம்

## பற்றிய நேரடி உரை

# பயம்

## பற்றிய நேரடி உரை

### வேதவசனத்தின் வல்லமையால் உணர்ச்சிப்போராட்டங்களை எதிர்கொள்ளுதல்


# ஜாய்ஸ் மேயர்



JOYCE MEYER MINISTRIES®

Nanakramguda, Hyderabad - 500 008

Unless otherwise indicated, all Scripture quotations are taken from *The Amplified Bible* (AMP). *The Amplified Bible, Old Testament,* copyright © 1965, 1987 by Zondervan Corporation. *The Amplified New Testament,* copyright © 1954, 1958, 1987 by The Lockman Foundation. Used by permission.

Scriptures marked KJV are taken from the *King James Version* of the Bible.

Originally published as *Help Me I'm Afraid.*

Copyright © 2014 by Joyce Meyer Ministries - Asia

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, or stored in a database or retrieval system, without the prior written permission of Joyce Meyer Ministries - Asia.

Joyce Meyer Ministries - Asia
Nanakramguda,
Hyderabad - 500 008
Phone: +91-40-2300 6777
Website: www.jmmindia.org

Straight Talk on FEAR - *Tamil*
*Overcoming Emotional Battles With the Power of God's Word!*

*Printed at:*
Caxton Offset Pvt. Ltd.
Hyderabad - 500 004

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | *முன்னுரை* | vii |
| ***பகுதி 1*** | பயத்திலிருந்து விடுதலை | 1 |
| 1 | பயத்தை எதிர்கொள்ளுதல் | 3 |
| 2 | எல்லாவற்றிற்காகவும் ஜெபி<br>எதற்கும் பயப்படாதே! | 17 |
| 3 | ஜெபத்தின் வகைகள் | 35 |
| 4 | இராஜ்யத்தின் திறவுகோல்கள் | 55 |
| | முடிவுரை | 73 |
| ***பகுதி 2*** | வேதவசனங்கன் | 75 |
| | பயத்தை எதிர்கொள்வதற்கான<br>வேதவசனங்கள் | 77 |
| | ஜெபம் | |
| | பயத்தை எதிர்த்துப்<br>போராடுவதற்கான ஜெபம் | 81 |
| | தேவனோடு தனிப்பட்ட உறவு<br>வைத்துக்கொள்வதற்கான ஜெபம் | 83 |

# முன்னுரை

இயேசு கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளான நமக்கு பரிசுத்த ஆவிக்குரிய அடிப்படை சொத்தான பல நன்மைகளுள் ஒன்று பயத்திலிருந்து விடுதலை! நாம் பயத்திலிருக்கும்போதுங்கூட, தேவன் நம்மோடிருந்து நம்மைப் பாதுகாப்பார் என நாம் அறிந்திருப்பதால் நாம் துணிச்சலுடன் முன்னேறி, தெளிவோடு செயல்பட முடியும். நாம் அவருக்குக் கீழ்படிந்து நடக்குமட்டும் அவர் நமக்கு முன்சென்று நமக்காகப் போராடி, நம்மை விடுவித்து உதவுவார். நம்மை வெற்றியை எட்டும்படியாக வழிநடத்துவார். உங்கள் வாழ்க்கையில் பயத்தின் காரணமாக எதையேனும் தவறவிட்டுவிட்டதாக உங்களுக்குத் தோன்றினால், அந்த பயத்தை எவ்வாறு கையாள்வது என்றும், அதை எவ்வாறு முறியடிப்பது என்றும் கற்றுக்கொள்வதுடன், நமக்காக தேவன் ஆணையிட்டிருக்கிற அபரிமிதமான செல்வங்கொழிக்கும் வாழ்க்கையை எவ்வாறு அனுபவிக்கத் தொடங்குவதென அறிந்துகொள்வதும் உங்களுக்கு எளிதாய் இருக்கும்.

# பகுதி 1

## பயத்திலிருந்து விடுதலை

# 1

# பயத்தை எதிர்கொள்ளுதல்

*உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னுடனேகூட வருகிறார். அவர் உன்னை விட்டுவிலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை.*

*உபாகமம் 31:6*

# 1

# பயத்தை எதிர்கொள்ளுதல்

"*பயப்படாதே! தேவனாகிற நான் உன்னுடனேகூட இருக்கிறேன்.*" என்ற செய்தி வேதாகமம் நெடுகிலும் பல வழிகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தேவன் நமக்காக திட்டமிட்டிருக்கிற எல்லா வளங்களையும் நாம் பெற்று, அதன்படி வாழ்வதை பயம் அறவே தடுப்பதாலும், அவர் நம்மை நேசிப்பதோடு, நாம் இரட்சிப்பின் ஆசீர்வாதத்தையும் பெற விரும்புவதாலும், பயத்தை விரட்டியடிக்கும் பல வழிமுறைகளை அவரே நமக்கு வழங்கியுள்ளார்.

இயேசு கிறிஸ்துமீது நம்பிக்கை கொண்டுள்ள நாம், அவிசுவாசிகளும், இவ்வுலகத்தோரும் பயப்படும் காரியங்களுக்குப் பயப்படத் தேவையே இல்லை என்பதைப் பற்றி பின்வரும் பகுதிகளில் காணலாம். அவற்றிற்கெல்லாம் பயப்படுவதை தேவன் ஒருபோதும் விரும்புவதில்லை.

*கர்த்தருடைய கரம் என்மேல் அமர்ந்து, அவர் என்னுடனே பேசி, நான் இந்த மக்களின் வழியிலே நடவாதபடி எனக்குப் அறிவுறுத்தி விளம்பினதாவது:*

*இந்த மக்கள் கட்டுப்பாடு (கடினம், புனிதம்) என்று சொல்லுகிறதையெல்லாம் நீங்கள் கட்டுப்பாடு (கடினம், புனிதம்) என்று சொல்லாமலும், அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நீங்கள் பயப்படாமலும், (பிறரை பயமுறுத்தாமலும்,) கலங்காமலும்*

*சேனைகளின் கர்த்தரையே (அவர் தந்த உறுதியான பாதுகாப்பின் உங்கள் விசுவாசத்தைக் கொண்டு மகிமைபடுத்துவதன்மூலம்) பரிசுத்தம் பண்ணுங்கள். அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக.*

ஏசாயா-8:11-13

அவரிலும், அவர்தம் ஒப்பற்ற வல்லமையிலும் வலுப்பட்டு, நாம் வெற்றிகரமான வாழ்க்கையை வாழ முடியும் என தேவன் தமது வசனத்தில் கூறுகிறார்.

## *பயமில்லை!*

தேவவிசுவாசத்தில் விட்டு வெளியே அடியெடுத்து வைத்த அனுபவம் நம் அனைவருக்குமே இருக்கும். அதைப்பற்றி எண்ணும்போதெல்லாம் நமக்குள் பயம் அதிகரிக்கிறது. இந்த பயத்திற்கு சாத்தானே மூலக்காரணம் என்பதை நாம் உணர்ந்திருப்பது மிக அவசியமானதாகும். 1 யோவான் 4:18ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

*அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும், பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.*

ஆண்டவருக்கு விருப்பமானபடி நாம் செயல்படுவதையும், அவர் நமக்காக வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை நாம் பெறுவதையும் தடுக்கவே, சாத்தான் நம்மில் சந்தேங்கங்களையும் குழப்பத்திற்கிடமான, துயரமிக்க வேதனைகளை உண்டாக்குவதற்காக பயத்தை அனுப்புகிறான். தேவன் நமக்குக் கூறிய வசனங்களில் நமது அசைக்க முடியாத தேவவிசுவாசத்தை வைத்தால், நாம் சிறிதும் பயமின்றி வாழலாம். எடுத்துக்காட்டாக,

*தேவன் நமக்கு பயமுள்ள (கோழைத்தனமான,*
*இழிவாகக் கெஞ்சுகிற, அச்சத்தில் பதறுகிற)*
*ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த*
*அறிவுமுள்ள ஆவியையேக் கொடுத்திருக்கிறார்.*

*2 தீமோத்தேயு 1:7*

*நீங்கள் பலங்கொண்டு திடமனதாய் இருங்கள்,*
*அவர்களுக்கு பயப்படவும், திகைக்கவும் வேண்டாம்.*
*உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னுடனேகூட*
*வருகிறார், அவர் உன்னை விட்டுவிலகுவதுமில்லை,*
*கைவிடுவதுமில்லை.*

*உபாகமம் 31:6*

ரோமர் 10:17 சொல்கிறது: *"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்திலே வரும்."* தாகத்திலிருக்கும் ஒருவர் ஒரு குவளை தண்ணீரைக்

குடிப்பதுபோல, நாம் இந்தப் புத்தகத்தை ஆர்வத்துடன் ஊன்றிப் பயில்வதும், வேதவசனங்களைப் பிழையறக் கற்றுப் புரிந்துக்கொண்டு, அவற்றை சத்தமாக அறிக்கையிட்டு ஒப்புக்கொள்வதும் நமக்கு மிக அவசியமாகும். நாம் நம் வாய்திறந்து, தேவன் நமக்கு கூறியவற்றையும், நம்மைப்பற்றிக் கூறியவற்றையும் உணர்வுப்பூர்வமாக அறிவித்து ஒப்புக்கொள்ளும்போது, அந்த தேவவசனமானது நம்மைத் தடுக்கிற, துன்புறுத்துகிற அனைத்து பயங்களையும் முறியடிக்கும் வல்லமையை நமக்குத் தரும்.

*நாம் எதையாகிலும் (எந்த வேண்டுகோளையாகிலும்) அவருடைய விருப்பத்தின்படி (அவர்தம் சுயமான திட்டத்திற்குட்படும்படி) கேட்டால், அவர் நமக்கு செவிகொடுக்கிறார் என்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் (உறுதி, உரிமையின் நம்பகத்தன்மை).*

*நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோ மென்றும் அறிந்திருக்கிறோம்.*

*2 யோவான் 5:14,15*

தேவனின் வசனங்களை உணர்ந்து ஒப்புக்கொள்வதிலும், அதில் ஒருமித்து ஜெபம் செய்வதிலும்தான் வல்லமை அடங்கியுள்ளது. தேவன் நமக்கு அறிவுறுத்திய, அவருடைய சித்தமும் விருப்பமான வழியும் அதுவே ஆகும். நம் ஜெபவேளைகளில் தேவவசனத்தை சத்தமாக அறிக்கையிட்டு,

உணர்ந்து ஒப்புக்கொள்வதும் மிக முக்கியமானவற்றுள் ஒன்றென ஒரு சமயத்தில் நான் உணர்ந்துகொண்டேன்.

பயத்தினாலோ அல்லது திகிலினாலோ அல்லது வியப்பின் மலைப்பினாலோ அல்லது வேறெந்தவொரு காரணத்தினாலோ நாம் சில விஷயங்களை எதிர்கொள்ளாமல் தவிர்க்க முயல்வதை நாமே உணரும்போது, நாம் செய்ய வேண்டிய ஒரே காரியம் என்னவென்றால், ஆழ்ந்து ஜெபிப்பதுடன் தேவன் தனது வசனத்தில் நமக்கு வாக்களித்தபடி நமக்கு முன்பாகச் சென்று, நாம் செல்ல வேண்டிய பாதையை செவ்வைபடுத்துமாறு வேண்டிக்கொள்ளவும் வேண்டும்.

நாம் பெற்றுக்கொள்வதில்லை, ஏனெனில் நாம் கேட்கிறதில்லை என்று (யாக்கோபு 4:2ல்) யாக்கோபு நமக்குப் போதிக்கிறார். மேலும், கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்று (மத்தேயு 7:7) இயேசு நமக்கு அறிவுறுத்துகிறார்.

எடுத்துக்காட்டாக, நாம் ஒரு வேலைக்கான நேர்காணலின்போது, பயத்தோடு அணுகி, நம்மைப் பற்றிய ஒரு தவறான உருவகத்தை உண்டாக்கி, பதவியைத் தவறவிடுவதற்குப் பதிலாக, நாம் தேவனிடம் நம்மோடுகூடவே இருக்கும்படியாகவும், நமக்கு முன்சென்று, நம் பாதையை ஆயத்தப்படுத்தும்படியாகவும் வேண்டிக்கொள்வதும் அவசியமாகும். அதன்காரணமாக நிச்சயமாக நம்மை நாமே மிக்க ஒளியின் நடுவில் தெளிவாக அறிமுகப்படுத்திக் கொள்ள முடியும். மேலும், பிற்பாடுகூட, நடப்பது எதுவாக இருந்தாலும், அது தேவனின் பரிசுத்த விருப்பத்தின்படியாகவும், நமக்காக அவர் வகுத்தத் திட்டத்தின்படியாகவுமே நடக்கிறதென நாம் வலுவாய் நம்ப முடியும்.

# *பயந்தும் செய்யுங்கள்!*

*கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கிற தேசத்துக்குப் போ.*

*ஆதியாகமம் 12:1*

இதுபோலவே, உங்களிடம் தேவன் உங்கள் வீடு, குடும்பம் மற்றும் நீங்கள் நன்கு பழகிய, சொகுசான அனைத்தையும் துறந்துவிட்டு வருமாறு அழைத்திருந்தால், உங்களுக்கு எப்படி இருந்திருக்கும்? பயமே மனம் முழுவதும் நிறைந்திருந்திருக்கும்.

ஆபிரகாமும் இப்பகுதியில் அதே கடினமான சவாலைத்தான் எதிர்கொண்டார். அது அவரை வெகுவாகவே வருத்தியது. அதனால்தான் தேவன் அவரிடம் “பயப்படாதே!” என மீண்டும், மீண்டும் சொல்லிக்கொண்டேயிருந்தார். இஸ்ரேலிய சந்ததியாருக்குப் பூர்வச் சொத்தாக தான் கொடுப்பதாக ஆணையிட்டிருந்த தேசத்துக்கு, அவர்களை வழிநடத்தும்படி தேவன் யோசுவாவை அழைத்தபோதும் இதே செய்தியைத்தான் கூறினார் (யோசுவா 1:6,7,9).

தேவனுக்காக எவரேனும் ஏதேனும் செய்யப்போகிறார் என்பதும், அவர் தேவனிடமிருந்து முறைவைத்து வழக்கமாக பயப்படாதே! என்பதையே கேட்கப் போகிறார் என்பதும் ஒன்றே எனலாம்.

எலிசபெத் எலியட்டின் கணவர் ஈக்வடார் எனும் நாட்டில் மற்ற நான்கு தேவநற்செய்தி ஊழியர்களோடு சேர்த்து கொல்லப்பட்டபோது, அவரது வாழ்க்கை முற்றிலுமாக

பயத்திலேயேக் கட்டப்பட்டிருந்தது. அவர் வெளியே போக அடியெடுத்து வைக்கும்போதெல்லாம், பயம் அவரை தடுத்து நிறுத்தியது. அவருடைய தோழி ஒருவர், நீ பயந்துக் கொண்டே ஏன் செய்யக்கூடாது? என்று கேட்டு, தைரியம் கூறினார். அதன்பின், எலிசபெத் எலியட்டும், கொலையுண்ட மற்றொருவருடைய சகோதரியுமான ரேச்சல் செயிண்ட்டும் அதே கொலையாளிகள் அடங்கிய இந்தியப் பழங்குடி மக்களிடம் தேவநற்செய்தியை ஊழியம் செய்யப் போனார்கள்.

பயம் விலகும்வரைக்கும் நாம் காத்திருக்கத்தான் வேண்டும் என பல நேரங்களில் நினைக்கிறோம். அவ்வாறே நாம் செயல்படுவோமேயானால், பெரும்பாலும் தேவனுக்கும், பிறகுக்கும், ஏன்? நமக்குங்கூட மிகக் குறைந்தளவே நாம் நிறைவை எட்டியிருப்போம். ஆபிரகாமும், யோசுவாவும் தேவவிசுவாசத்தில் நடந்தபோது, கடவுளுக்குக் கீழ்படிந்தவர்களாய் இருந்ததுடன் அவர்கள் பயந்திருந்தும், அவர் அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியே தொடர்ந்து பாதைவிலகாது நடந்தனர். நீ ஏன் பயந்துக் கெண்டே செய்யக் கூடாது? என்ற இந்த கதையை தேவன் எனக்கு நினைவுப் படுத்தினார். பின்னர் பயத்தைப் பற்றிய சில காரியங்களை அவர் எனக்கு காண்பிக்கத் தொடங்கினார்.

## *பயப்படாதே! என்பது ஓடிப்போகாதே!*

*பயப்படாதிருங்கள்! நீங்கள் (நம்பிக்கையுடன், வலுவான, கலக்கமின்றி) நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்...*

*யாத்திராகமம் 14:13*

நான் கூர்ந்து ஆராய்ந்ததில், கர்த்தர் என்னிடம் சொன்ன பயப்படாதே என்ற பதத்திற்கு ஓடிப்போகாதே! என்பதேத் துல்லியமான பொருளாகத் தோன்றியது. எனவே பயத்திற்கான விடையும் மிகவும் எளிது.அதனால் பயத்தினால் நாம் எதிர் கொள்ளப்படும் போது சிறிதும் அசைந்துகொடாது, திடமான உறுதியோடு அதை எதிர்த்துநிற்க வேண்டும்.

கர்த்தர் தனது வசனங்களில் இதைத்தான் தெளிவாகக் கூறியிருக்கிறார். நம் முழங்கால்கள் நடுக்கங்கொண்டாலும், நா வறண்டுபோனாலும், நாம் வீழ்ந்தேபோனோம் எனத் தோன்றினாலும், நாம் தொடர்ந்து "கர்த்தரே! என்னை பலப்படுத்தும்! நீர் என்னை என்ன செய்யச்சொன்னீரோ அதையே செய்கிறேன்! உம் தயவினால் மட்டுமே நான் இதை செய்யப்போகிறேன்! இது எனக்கான உமது விருப்பமாதலால் என் வாழ்வானது உமது வசனங்களினால் அல்லாமல், பயத்தினால் ஒருபோதும் ஆளப்படபோவதில்லை என உறுதியாயிருக்கிறேன்!" என்று உருக்கத்துடன் ஜெபித்துக்கொள்ள வேண்டும்.

## *வேதவசனத்துடன் பயத்தை எதிர்கொள்*

பயம் தானாக விலகிப்போகும் என எதிர்பார்த்துக்கொண்டோ, நம்பிக்கொண்டோ இருக்கமுடியாது. அது நிச்சயமாக தேவனின் வல்லமைமிக்க வசனத்தைக்கொண்டு மட்டுமே எதிர்கொள்ளப்படவும், விளக்கப்படவும் வேண்டிய ஒன்று.

ஜெபத்தினால் மக்கள் அற்புதகரமாக பயத்திலிருந்து விடுபட்ட நிகழ்வுகள் பல நடந்துள்ளன. நாம் சேவித்துவருவதே

சந்தேகத்திற்கிடமின்றி அற்புதங்கள் - நிகழ்த்தும் கர்த்தர் ஆவார். பயத்தின் நடுக்கத்திலிருந்து விடுபட பலருக்காகவும் நான் ஜெபித்திருக்கிறேன். அதன்பின்பு என்னிடம் வந்த அவர்கள் நீங்கள் எனக்காக ஜெபித்தபிறகு, எனக்கு பயத்தினால் எந்தப் பிரச்சனையும் எழவே இல்லை என்றார்கள். ஆனால் பெரும்பாலான நேரங்களில், நாம் நமக்குள்ளாகவே தேவனின் வசனங்களைக் கூறிக்கொள்வதும், தியானித்துப் பார்ப்பதும், பரிசுத்த ஆவியின் பெலத்தினால் பயம் உற்பத்தி ஆவதையே தடுப்பதுமே பயத்தை எதிர்கொள்ளவும், முறியடிக்கவும் சிறந்த முறைகளாக இருக்கும்.

என் சொந்தவாழ்விலுங்கூட, என் சிறுவயதில் நான் தவறாக நடத்தப்பட்டதனால் பல பெரும்பிரச்சனைகளில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தேன். நான் விடுதலைப் பெற வேண்டிய விஷயங்கள்தாம் என் வாழ்வு முழுதும் நிரம்பிக் கிடந்தன. ஒரேயொரு சிறுவிஷயம் தவிர! நான் தொடர்ந்து அவரது வசனங்களை என் வாழ்வில் நடைமுறைப்படுத்திவந்த அந்த ஒருசெயலின் விளைவாக, தேவன் என் கட்டுகள் அனைத்திலிருந்தும் என்னை விடுவித்தார். கர்த்தர் எப்போதும் ஒரேப்போல எதிலிருந்தும் விடுவித்து விலக்கிவிடமாட்டார். மாறாக, அவற்றின் ஊடாக நம்மோடு கரம்தாங்கி நடத்தார்.

## *பயம் போலியானது!*

*பிசாசானவன் ஆதிமுதற்கொண்டு மனிதகொலை*
*பாதகனாயிருக்கிறான், உண்மை (சத்தியம்)*
*அவனிடத்தில் இல்லாதபடியால் அவன்*
*உண்மையிலே (சத்தியத்திலே) நிலைநிற்கவில்லை.*
*அவன் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாய்*

*இருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான்.*

*யோவான் 8:44*

வேதாகமம் நமக்கு “நடுங்காதே!” என்றோ, “அயறாதே” என்றோ, “தடுமாறாதே!” என்றோ சொல்லாமல், “பயப்படாதே!” என்கிறது. அதில்தான் ஒரு வேறுபாடு உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், பயப்படுவது என்பது அதிலிருந்து பின்வாங்கிவிடுவது அல்லது விலகி ஓடிவிடுவது என்பதையேக் குறிக்கும்.

பயம் என்கிற சொல்லின் ஆங்கிலச் சொல்லான “FEARன் விரிவாக்கம் கீழ்கண்டவாறு சொல்லப்படுகிறது. “False Evidence Appearing Real.”

இதற்கு உண்மை போன்ற பொய்சாட்சி (மாயை) எனத் தமிழில் பொருளாகும்.

பிசாசு ஒரு பொய்யனும், பொய்க்குப் பிதாவாகவும் இருக்கிறான் என இயேசு கூறியிருக்கிறார். அவனிடம் உண்மை துளியும் இருப்பதில்லை. அவன் போலியான மாயையை பயன்படுத்தி, தேவனின் பிள்ளைகளை பயத்தில் மூழ்கடிக்க முயற்சிப்பான். அதனால் அவர்கள் கர்த்தருக்குக் கீழ்படிந்து நடந்து, அவர்தம் ஆசீர்வாத வளங்களைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு, போதிய திடமான பலத்துடன் இல்லையேல், அவன் அவர்களுக்குள் வந்து குடிகொள்வான்.

பெரும்பாலான நேரங்களில் ஏதேனுமொரு விஷயத்தினால் நாம் படும் பயம், அந்த விஷயத்தைக் காட்டிலும் மிகவும் கொடுமைகரமானதாக இருக்கும். வழக்கமாக, ஒன்றைச் செய்வதற்கு நாம் எவ்வளவு பயப்பட்டாலும் போதுமான

துணிச்சலுடனும், தீர்மானத்துடனும் இருந்தால், அந்த காரியம் நாம் நினைத்தளவிற்கு மோசமானதாக முடியவில்லை என்பதை கண்டுகொள்ளலாம்.

வேதவசனம் நெடுகிலும் பார்த்தால், கர்த்தர் தம் மக்களிடம் மீண்டும் மீண்டும் "பயப்படாதே!" என்பதையே சொல்கிறார் என்பதை புரிந்துகொள்வோம். அவர்களை உற்சாகப்படுத்தவும், தங்களுக்கான தேவ ஆசிர்வாதங்களை சாத்தான் பறித்துக் கொள்ள அனுமதித்துவிடாமல் இருக்கவும்தான் தேவன் அவ்வாறு பலமுறை சொன்னார் என நான் நம்புகிறேன்.

அதேநேரத்தில், நாம் பயப்படக் கூடியவர்கள் என அவர் அறிந்திருப்பதால், அதனாலேயே நம்மை ஆர்வத்துடன் தூண்டுவதையும், நம்முன் காத்திருக்கும் காரியங்களை உந்துதலுடன் செய்ய உற்சாகப்படுத்துவதையும் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கிறார். ஏன்?... ஏனென்றால், மறுபக்கத்தில் நமக்கான ஒப்பற்ற ஆசீர்வாதங்கள் காத்திருக்கின்றன என அவர் அறிந்திருக்கிறார்.

ஆபிரகாமிடம் இதற்கான எடுத்துக்காட்டு ஒன்றைக் காணலாம்.

## *ஒப்பற்ற வெகுமதி தரும் துணிச்சலும், பணிவும்*

*இந்த காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிரகாமே! நீ பயப்படாதே! நான் உனக்குக் கேடகமும், உனக்கு மிகப்பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்.*

*ஆதியாகமம் 15:1*

நாம் முன்பு ஆதியாகமம் 12:1ல் கண்டதுபோல், தேவன் ஆபிரகாமிடம் ஒரு கடினமான கட்டளை முன்வைத்தார். அவர் விலாவாரியாகவே ஆபிரகாமிடம், “உன் உற்றார், வசதிகள் அனைத்தையும் விடுத்து, கிளம்பி, நான் உனக்குக் காண்பிக்கிற தேசத்துக்குப் போ” என்றார்.

ஆபிரகாம் அச்சூழ்நிலையில் பயத்திற்குத் தாழ்பணிந்திருந்தால், அதன்பின்பான ஆபிரகாமின் மீதிக்கதை வேதாகமத்தில் இடம்பெற்றிருக்காது. கர்த்தர் தான் அவருக்கு ஆணையிட்டிருந்தபடி கேடகமாகமாகவும், மிகப்பெரிய பலனாகவும் இருந்ததை ஆபிரகாமும் அனுபவித்திருந்திருக்க முடியாது.

அதேபோல, யோசுவாவும் தன் பயத்தை வென்றிருக்காவிடில் கர்த்தர் ஆணையிட்டிருந்தபடி அவர்தம் மக்களை வாக்குக்கொடுத்த தேசத்துக்கு அவரை அழைத்துச் செல்ல, கீழ்படிந்திருக்காவிடில் அவரும் சரி! அந்த மக்களும் சரி! கர்த்தர் அவர்களுக்காக திட்டமிட்டிருந்த, ஏற்பாடு செய்திருந்த அனைத்து வளங்களையும் அனுபவிக்க முடியாமலேயே போயிருக்கும்.

பிசாசின் இச்சைகளின்படி நாம் பயத்தின்முன் மண்டியிட்டுக் கிடப்பதைத் தடுக்கும் ஒப்பற்ற வல்லமை தேவவசனங்களில் மட்டுந்தான் உண்டு! நாம் பயத்தோடிருந்தாலுங்கூட, தேவன் நாம் என்ன செய்ய விரும்புகிறாரோ அதை பிழையின்றி செய்யலாம்.

# 2

# எல்லாவற்றிற்காகவும் ஜெபி எதற்கும் பயப்படாதே!

*...நீதிமான் செய்யும் ஊக்கமான (இதயம் உணர்ந்த, இடைவிடாது நீடித்த) வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் (பலவழிகளில் பயன்தரும்விதமாய்) இருக்கிறது.*

*யாக்கோபு 5:16*

# 2

# எல்லாவற்றிற்காகவும் ஜெபி எதற்கும் பயப்படாதே!

சில காலங்களுக்கு முன்பு தேவன் இந்த வார்த்தைகளை என்னிடம் பேசினார்: “எல்லாவற்றையும் பற்றி ஜெபி, ஒன்றிக்கும் பயப்படாதே” என்றார். என் தலையை அலங்கரிக்கவிருக்கும் புதியவர் ஒருவர் அதனை நன்றாக செய்யமாட்டார் என்ற ஒரு விதமான பயம் எனக்கு ஏற்பட்டபோது தேவன் இதை என்னிடம் கூறினார்.

பரிசுத்த ஆவியானவர் என்னிடம்: “அதைப்பற்றி பயப்படாதே, அதற்காக ஜெபி. தேவன் அந்த பெண்மணியை அபிஷேகித்து, உனக்கு என்ன செய்யப்பட வேண்டுமோ அதை செய்யும்படி ஜெபி” என்றார்.

அதை தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு ஜெபத்தைப் பற்றியும், பயத்தைப் பற்றி பல காரியங்களை அவர் எனக்கு காண்பிக்கத் தொடங்கினார். அவற்றில் அநேகர் என் வாழ்வில் சின்ன சின்ன காரியங்களில் பயம் உள்ளே வந்து

பிரச்சனைகளை ஏற்படுத்தும். ஒவ்வொரு காரியத்திலும், எவ்வளவு பெரிதோ, முக்கியமானதோ, சின்னதோ, அற்பமானதோ என்னவாக இருந்தாலும், அதற்கான விடை ஜெபமேயாகும்.

> நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.
>
> உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.
>
> ஏசாயா 41:10,13

இவ்வரிகளில் கர்த்தர் தம் மக்களுக்கு, “உங்களைச் சுற்றி நிறைந்திருக்கும் கொடூரங்களைக் கண்டு, கலங்க வேண்டாம்! உங்களுக்காக உங்கள் தேவன் நான் இருக்கிறேன்!” என்கிறார்.

சிலநேரங்களில், நம்மைச் சுற்றியுள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கண்டு, நமக்கு பயம் தொற்றிக்கொள்கிறது. அது எப்படியும் ஒரு தவறுதான்! எத்தனை அதிகமாய் பிரச்சனைக்குள் நம் கண்களையும், வாயையும் செலுத்துகிறோமோ, அத்தனை அதிகமாய் நாம் பயத்தில் மூழ்குகிறோம். அதற்குப் பதிலாக, நம் கண்களும், வாயும் தேவனை நோக்கி செலுத்தப்பட வேண்டும். அவருக்கு மட்டுமே நம் வாழ்வில் நாம் எதையெல்லாம் சந்திக்க வேண்டுமோ அவையனைத்தையும் கையாளும் திறனைக் கொண்டிருக்கிறார்.

கர்த்தர் தமது வல்லமைமிக்க வலக்கரத்தால் நம்மை பலப்படுத்துவதாகவும், துயரங்களில் உறுதிபடுத்துவதாகவும்,

தாங்கிப்பிடிப்பதாகவும், திடமாய் நிலைநிறுத்துவதாகவும், வெற்றி சிறக்க செய்யவும் நமக்கு வாக்களித்திருக்கிறார். மேலும் "ஒருபோதும் பயப்படாதே!" என்ற ஆணையையும் இட்டிருக்கிறார். ஆனால் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்! அவர், பயம் நம்மை கட்டுப்படுத்த விடக்கூடாது என்றாரே தவிர, நாம் ஒருபோதும் பயத்தை உணரக்கூடாது எனக் கூறவில்லை.

கர்த்தர் உங்களிடமும், என்னிடமும் தனித்தனிப்பட்டமுறையில் "பயப்படாதே! நான் உனக்கு உதவுவேன்!" என்று சொல்லிக்கொண்டேதான் இருக்கிறார். ஆனால் அவர் செய்த அனைத்தையும் வரிசையில் அடுக்கி வைத்துப்பார்க்கும்வரையிலும், தேவவிசுவாசத்தில் கால் எடுத்துவைக்கும் அளவுக்கான கீழ்படிதல் நம்மில் தோன்றும்வரையிலும், நாம் கர்த்தர் நமக்கு ஆற்றிய உதவிகளை உணர்வதில்லை.

நான் ஊழியத்திற்காய் கர்த்தர் என்னை பரிசுத்த ஆவியால் நிரப்பி அபிஷேகிப்பது எப்போது என்று உங்களுக்கு தெரியுமா? மேடையில் ஏறி பேசத் தொடங்கும் போது... அதற்குமுன் இல்லை. நான் விசுவாசத்தால் நான் கால் எடுத்து வைக்கும் போது தான்.

இன்றே கர்த்தர் நம்மிடம், "உன் வாழ்க்கையை பயம் ஆள்வதை நிறுத்து! நான் உன்னை என்ன செய்யத் தூண்டினேனோ அதை உடனே செய்யத் தொடங்கு. ஏனென்றால் நான் சொல்வதனைத்தும் உன் நன்மைக்காகத்தான். மறுபக்கம் உனக்கு ஆசிர்வாதமான வளமிக்க வாழ்க்கை இருப்பதை நான் அறிந்திருப்பதைப்போலவே சாத்தானும் அறிந்திருக்கிறான். அதனால்தான் அவன் உனக்கெதிராக பயத்தைச் செலுத்தித் தடுத்துக்கொண்டிருக்கிறான். நான்

“பயப்படாதே!” என தைரியம்சொல்லிக்கொண்டே இருக்கிறேன்” என்று சொல்கிறார்.

## *பயப்படாதே! நீ என்னுடையவன்!*

*இப்போதும் யாக்கோபே! உன்னைப் படைத்தவரும், இஸ்ரவேலே! உருவாக்கின வருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே! உன்னை மீட்டுக்கொண்டேன்! உன்னைப் பெயர்சொல்லி அழைத்தேன்! நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போதும் அவை உன்மேல் புரளுவதில்லை! நீ நெருப்பில் நடக்கும்போது வேகாதிருப்பாய்! நெருப்புச்சுடர் உன்பேரில் பற்றாது.*

*ஏசாயா 43:1,2*

பலவிதமான சோதனைகளைக் கடந்துவந்தாலும் நாம் பயப்படவே கூடாது என இங்கு கர்த்தர் கூறுகிறார். இதற்கு, இவற்றிற்கெல்லாம் ஊடாக நாம் சென்றால்மட்டுமே, நாம் நம் வாழ்வின் வெற்றியை அடைவோம் என்று பொருள். அப்படி நாம் சென்றுகொண்டிருக்கும்போது, அப்புறமாக வேறெங்காகிலும் ஓடவும் கூடாது.

கர்த்தர் நமக்கு, நாம் தண்ணீர்களைக் கடக்கும்போது அது நம்மேல் புரளவிடாமலும், நெருப்பில் நடக்கும்போது நாம் வேகாதிருக்கவும், அது நம்மேல் பற்றிக்கொள்ளாதிருக்கவும் நம்மோடு இருந்து, நம்மை பாதுகாப்பார் என வாக்களித்திருக்கிறார்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ எனப்படும் மூன்று எபிரெய பிள்ளைகளின் கதை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர்கள் கட்டப்பட்டு, எரிகிற அக்கினிச் சூளையில் தள்ளப்பட்டபோதும், அவர்கள் ஒரு சேதமும் இல்லாமல், கொஞ்சமும் தீய்ந்த வாசனை இல்லாமலும் வெளியே வந்தனர். (தானியேல் 3:1-30)

அக்கினிச் சூளையில் தள்ளப்படுவது போன்ற சோதனையான மிகப்பெரிய பயங்களும் உண்டு. கூடவே, நம் தலைமுடியின் பொலிவு பாழாகிவிடக்கூடாதே என்பது போன்ற சிறுசிறு பயங்களும் உண்டு!

புற்றுநோய், மாரடைப்பு அல்லது நம் நெருங்கியோரின் இறப்பு போன்ற பெரிதான விஷயங்களுக்கோ அல்லது மழையினால் சுற்றுலா தடைபடுவது, வாகனத்தை நிறுத்த சரியான இடம் கிடைக்காதது போன்ற சிறிதான விஷயங்களுக்கோ பயப்படலாம்.

ஆனால், பிரச்சனை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், பயம் ஒன்றுதான். எனவே, அதற்கு நாம் தீர்வுகாணும் முறையும் ஒன்றுதான். நாம் முன்னதாக பார்த்தபடி, தேவவசனத்தோடு செய்யும் ஆழ்ந்த ஜெபத்தின் மூலமாகவே அதை எதிர்கொள்ள வேண்டும். நாம் ஜெபிக்கும் அதேநேரம், திடமாக விசுவாசிக்கவும் வேண்டும். பயம் என்பது நம் எதிரி! அதை நாம் அப்படியாகவே நடத்த வேண்டும்.

## *தேவவிசுவாசம்: பயத்தின் மாற்றுமருந்து*

*உங்களில் ஒருவன் அறிவில் குறைவு*
*உள்ளவனாயிருந்தால், யாவருக்கும் குறைவின்றி*
*கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து*
*கொள்ளாதவருமான தேவனிடத்தில்*

*கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.*

*ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.*

*அப்படிப்பட்ட மனிதன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.*

*யாக்கோபு 1:5-7*

*விசுவாசம் மட்டுமே பயத்தின் மாற்றுமருந்து.*

நீங்களோ, நானோ ஏதேனும் நச்சுப்பொருளை உண்டுவிட்டால், ஒன்று - நாம் உடனடியாக மாற்றுமருந்து உட்கொள்ளவேண்டும் அல்லது அது நம்மில் ஆபத்தான தீங்கையோ அல்லது மரணத்தையோகூட ஏற்படுத்திவிடும். பயம் எனும் ஆட்கொல்லி நஞ்சும் இதேத் தன்மையுடையதே! அதற்கு ஒரு மாற்றுமருந்தை நிச்சயமாக உட்கொண்டே ஆகவேண்டும். அந்த மாற்றுமருந்து விசுவாசத்தைத் தவிர வேறெதுவுமில்லை.

பயம் நம் கதவை தட்டவரும்போது, நாம் அதற்கு தவறாமல் தேவவிசுவாசத்துடன் பதிலளிக்க வேண்டும். ஏனென்றால் மற்ற எந்த வழியும் உங்களுக்கு இதன் நற்பலனைத் தராது. வேண்டுதல் மட்டுமே விசுவாசத்தை நோக்கி உங்களை முன்னெடுத்துச் செல்லும் வாகனமாகும்.

பிரச்சனையிடம் விசுவாசம் எடுத்துச்செல்லப்பட வேண்டும், அதனால் நாம் ஏதேனும் வழிகளில் விடுவிக்கப்படுவோம். (நாம்

எப்போதும் செய்வதுபோல) விசுவாச ஆழமில்லாமல் ஜெபித்துவிட முடியும், ஆனால் ஜெபிக்காமல் உண்மையான விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியாது.

யாக்கோபு சொல்கிறார் நாம் ஏதேனும் தேவையில் இருப்பதாக உணர்ந்தால், நாம் ஆடம்பரமின்றி எளிமையாக, விசுவாசத்தோடு ஜெபித்து, அதுகுறித்து தேவனிடத்தில் வேண்டிக்கொள்ள வேண்டும். இந்த இரு சொற்களும் முக்கியமானவை. எளிமையாக ஜெபிப்பதின் மூலமும், தேவனின் தெய்வீக சித்தத்தின்படியும், திட்டத்தின்படியும் அவரிடம் எதைக் கேட்டோமோ அதைப் பெற்றுக்கொள்வோம் என்ற விசுவாசத்துடனும் இருப்பதே மேற்கூறியவற்றைச் செய்ய சிறந்த வழியாகும்.

எனவே, பயத்தை முறியடிப்பதற்கான இரகசியம் - மிக எளிது! விசுவாசம் நிரம்பிய இடைவிடாத வேண்டுதலே அது!

## *எந்தசமயத்திலும் ஜெபியுங்கள்!*

*எந்த சமயத்திலும், எல்லாவிதமான*
*வேண்டுதலோடும், விண்ணப்பங்களோடும்*
*ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன்பொருட்டு*
*மிகுந்த மனவுறுதியோடும் எல்லா*
*பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும்*
*வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.*

*எபேசியர் 6:18*

எபேசியர் 6:10-17ல் அப்போஸ்தலராகிய பவுல், கர்த்தரின் சர்வாயுதவர்க்கத்தைப் பற்றியும், அவற்றை எவ்வாறு நாம் பயன்படுத்த வேண்டுமென்றும், பரிசுத்த ஆவிக்குரிய

போராட்டத்தில் தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தைப் பற்றியும் சொல்லுகிறார். அனைத்தும் வரிசைபடுத்திக் கூறப்பட்டப்பின்பு, 18ம் வசனத்தில், பவுல் தன் செய்தியில் “எந்தச் சமயத்திலும் ஜெபியுங்கள்” என்கிறார்.

எந்தெந்த சமயங்களில் நாம் ஜெபிக்கவேண்டும்?

எந்தச் சமயத்திலும்.

நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?

பரிசுத்த ஆவியினாலே, எல்லா ஜெபங்களையும் செய்யலாம்.

அடுத்த அத்தியாயத்தில், பலவிதமான மாறுபட்ட ஜெபங்களைப் பற்றி ஆராய்வோம். ஆனால் இப்போதைக்கு “எந்தச் சமயத்திலும் ஜெபிக்கலாம்!” என்பதில் நம் கவனத்தைச் செலுத்துவோம்.

அதற்கு என்ன பொருள்? அதற்கு, நாம் மளிகைக் கடைக்கு பலசரக்கு வாங்கிக்கொண்டிருக்கும்போது, கடவுள் என் மனதில் ஜெபிக்கத் தூண்டியவுடன் அந்தக் கடையின் நடுவிலேயே, அப்படியே முழங்காலிட்டு விழுந்து ஜெபிக்க வேண்டும் என்றா பொருள்?

நான் அடிக்கடி என் படுக்கையையொட்டி முழங்காலிட்டு ஜெபிப்பேன். தேவன் என்னை பணிந்துகொள்ள வலியுறுத்துவதாக நான் உணரும் வேறுசமயங்களில், அவர்முன் முகங்குப்புற விழுந்து ஜெபிப்பேன். உடல் அமைவை ஜெபத்துடன் குழப்பிக்கொள்ளாதவாறு நாம் கவனத்துடன் இருக்க வேண்டும். பேரங்காடிகளில் நாம் உலவிக்கொண்டிருக்கும் நேரத்திலுங்கூட, நம் மனதிற்குள் மௌனமாக ஜெபிக்கலாமே!

வாழ்க்கையின் பலவிதமான சூழ்நிலைகளில் நாம் பலவிதமான முறைகளில் ஜெபிக்க நேரிடுகிறது. எடுத்துக்காட்டாக, மூன்றோ, நான்கோ சிறுபிள்ளைகளைக் கொண்டிருக்கும் ஒரு இளம்தாயின் ஜெபவாழ்க்கைக்கும், முதிர்ச்சி பெற்று, வீட்டைவிட்டு வெளியே வசிக்கும் பிள்ளைகளுடைய ஒரு மூதாட்டியின் ஜெபவாழ்க்கைக்கும் எண்ணற்ற வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும்.

ஜெபத்தை ஒரேமுறையில்தான் செய்ய வேண்டும், மற்றவர்கள் எவ்வாறு இப்படியெல்லாம் ஜெபிக்கலாமென நாம் அளவுக்கதிகமாக சம்பிரதாயம் பார்ப்பவராகிவிட்டால், நம்மை நாமே ஆக்கினைக்குள்ளாகிக் கொள்கிறவர்களாகிவிடுவோம். பொதுவான, முக்கிய விஷயம் என்னவென்றால், ஜெபிக்கும்போதான நம் உடல் அமைவோ, நேரமோ அல்லது இடமோ முக்கியமில்லை தேவவிசுவாசத்தினுள் எந்தச் சமயத்திலும், இடைவிடாது ஜெபிக்கக் கற்றுக்கொள்வதே முக்கியமாகும். விரும்புகிற, தேவை எழுகிற எந்தச் சமயத்திலும்... ஜெபியுங்கள்!

## *இடைவிடாமல் ஜெபியுங்கள்!*

*இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்!*

*1 தெசலோனிக்கேயர் 5:17*

முன்பெல்லாம் இதைப் படிக்கும்போது, “கர்த்தரே! நான் இடைவிடாமல் ஜெபம் பண்ணக்கூடிய ஒரு இடத்தை என் வாழ்வில் எப்படி நான் அடைய முடியும்?” என வியப்பில் ஆழ்ந்துபோவேன். என்னைப் பொறுத்தவரைக்கும் “இடைவிடாமல்” என்பது நிறுத்தாமல் அல்லது ஒருபோதும்

முடிவின்றி - என்றே தோன்றியது. அது எப்படி சாத்தியமாகும் என்றெல்லாம் அப்போது எனக்குத் தோன்றவில்லை.

ஆனால் பவுல் என்ன சொன்னாரென்பதை இப்போது நன்றாகவே புரிந்துகொண்டுள்ளேன். அவர் நம் வேண்டுதலானது நம் சுவாசித்தலைப் போன்றதாக இருக்க வேண்டும் என்கிறார். அதாவது, நாம் மெய் மறந்து, நம்மையும் அறியாமல் அனிச்சையாய் செய்கிற சுவாசித்தலைப் போல...

நீங்களும், நானும் சுவாசத்தால்தான் வாழ்கிறோம். நம் புற உடல்கள் உயிர்வாழ அது இன்றியமையாதது. அதுபோலவே, நம் ஆத்தும உடல்கள் ஜெபத்தினால்தான் ஊட்டம் பெறவும், நிலைநிற்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இப்போது பிரச்சனை என்னவெனில், ஒருவித மத அடிப்படையிலான சிந்தனையினால் நாம் ஒரு குறிப்பிட்ட சடங்குமுறையை ஜெபத்தின்போது செய்யவில்லை என்றால், நமக்குரிய அடையாளத்தை இழந்துவிடுவோமென்ற தவறான எண்ணம்தான்! நம்முடைய ஜெபம் கடிகாரத்தை மட்டுமே சார்ந்த சடங்காக ரொம்பவே மாறிவிட்டது.

கர்த்தர் நாம் ஜெபத்தை எப்படியாகத் தெளிவுறப் புரிந்துகொள்ள வேண்டுமென இந்த எடுத்துக்காட்டைக் கொடுத்தார். நாம் நாள்முழுவதும் சுவாசிப்பதை எவ்வாறு காலஞ்செலவழித்து எண்ணிக்கொண்டிருப்பதில்லையோ, அதுபோல எவ்வித எண்ணிக்கையும், வரையறையும், சம்பிரதாயமும் இன்றி நாள்முழுவதும் ஜெபிக்கவேண்டும்.

சரியாக இந்த நேரத்திற்கு நான் மூச்சிழுக்க வேண்டுமென்று நினைவுபடுத்த என்னுடன் நான் ஒரு கடிகாரத்தைத் தூக்கிக்கொண்டு ஒருபோதும் அலைந்ததில்லை. நான் இரவு

வீட்டிற்கு வந்து, அன்றைக்கு எத்தனைமுறை சுவாசித்தேன் என்று ஒருநாளும் பட்டியலிட்டுப் பார்த்ததில்லை. நான் இயல்பாக எனக்குத் தேவைப்படும்போதெல்லாம் சுவாசித்துக்கொண்டேன்! விட்டுவிட்டோ...இடைவிடாமலோ...! அதற்காகவொன்றும் தீவிர ஆலோசனையில் இறங்கவில்லை.

நாம் நம் ஜெபங்களில் இருக்க வேண்டிய முறையும் அதுதான்!

நான் ஒருநாளில் எத்தனைமுறை ஜெபிக்கிறேன் என்று எனக்கே தெரியாது. நான் நாள்முழுவதும் ஜெபித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஒருநாளில் காலை எழும்போது தொடங்கி, இரவு உறங்கப்போகும்வரை ஜெபிக்கவே செய்கிறேன். ஜெபத்திற்கென்று தனியாக நேரம் ஒதுக்கி ஜெபிக்கிற நேரத்தையும் நாள் முழுவதும் ஜெபிக்கிற ஜெபத்தையும் நான் அனுபவிக்கிறேன்.

இதற்கு, நான் நாள்முழுவதும் வேறுவேலையே செய்யவில்லை என்று அர்த்தமா? இல்லை! வேண்டிய மற்ற வேலைகளுக்கும் என் நேரத்தை செலவழித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனால், நான் ஒவ்வொரு சூழ்நிலையிலும் எல்லா இடத்திலும் பலவிதமான ஜெபங்களை நாம் எடுத்துக்கொள்ளும்போது, நாம் எல்லா நேரத்திலும் ஜெபிக்கக்கூடும் என்று பார்க்கிறோம். அவற்றை தேவன் கேட்பார் – அது நாம் ஜெபிக்கக்கூடிய மற்ற அனைத்து ஜெபங்களைப்போன்று வல்லமையானதாகவும் இருக்கிறது.

பிசாசானவன், நம் ஜெபவாழ்க்கை மோசமாய் இருக்கிறதென நம்மையே ஏன் நினைக்கவைக்கிறான் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால், அவ்வாறுமட்டும் அவன் செய்துவிட்டால், அப்புறமாக நாம் ஜெபத்தை கடமைக்காக செய்வோமேதவிர,

தேவவிசுவாசத்தோடு ஒன்றி செய்யமாட்டோம், விசுவாசமில்லாத ஜெபம் நமக்கு வெற்றியைத் தருவதில்லை.

## *ஜெபத்திற்கான முறைபாடுகள்:*

*ஜெபவேளையிலே... ...பேதுருவும், யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்.*

*அப்போஸ்தலர் 3:1*

பலர் தங்கள் ஜெபவாழ்க்கையைக் குறித்துக் குற்றவுணர்ச்சி கொண்டவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் அதற்கு அவசியமேயில்லை! ஏனெனில், நம் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட ஜெபவாழ்க்கை இருக்கவேண்டுமே தவிர, அது மற்ற எவருடையதையும் போலவே இருக்க வேண்டியதில்லை.

ஆம்! ஜெபத்திற்கு திட்டவட்டமான முறைபாடுகள் தேவைதான். எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் ஜெபிக்கும் ஒழுக்கத்தைத் தரும் நடபடிகள் இருப்பது நல்லதுதான்!

புதிய ஏற்பாட்டின் காலத்திலுங்கூட, அப்போஸ்தலரின் நடபடிகள் புத்தகத்தில் நாம் முன்பு கண்டதுபோல, ஒருநாளின் குறிப்பிட்ட ஒரு நேரத்தையும், ஒரு இடத்தையும் பூர்வ சீஷர்கள் ஜெபிப்பதற்கென்று முறையாகக் கொண்டிருந்தனர். அது நல்லதொரு தன்னொழுக்கந்தான்! அதில் தவறொன்றுமில்லை! ஆனால் அது ஜெபத்தின் தொடக்கமாக இருக்கவேண்டுமேவொழிய, முடிவாக அல்ல...

இதில் முக்கியக் கருத்து என்னவென்றால், நாம் முதலில் இறைவனை துதித்து, தொழுகைக்கானதொரு கால

அட்டவணையை நமக்கென்று, நமக்குப் பொருத்தமானபடி வகுத்துக்கொள்ள வேண்டும். பின்னர் அந்த அட்டவணை நடவடிக்கை நம் அன்றாட வாழ்க்கையின் இயல்பானதொரு பகுதியாகி, நாம் சிந்தியாதபோதும் செய்வதாக ஆகும்வரைக்கும் அதை கைவிட்டுவிடாது, உறுதியாக கடைபிடிக்க வேண்டும்.

நான் பல் துலக்குவதற்குங்கூட சட்டதிட்டம் வைத்து, செயல்பட வேண்டிய காலமும் இருந்தது. ஆனால் இப்பொழுதோ அதைப்பற்றி துளியும் சிந்திக்காமலேயே இயல்பாக அதைச் செய்துவருகிறேன். இப்பொழுதெல்லாம் காலையில் எழுந்தவுடனேயும், இரவு படுக்கைக்குச் செல்லும்முன்பும், ஒவ்வொருமுறை உணவுண்டபிறகும் அனிச்சையாகவே பல்துலக்குகிறேன். பல்துலக்குவது என்பது என் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டது.

இதுவே நாம் நம் தேவனுடன் நடைபோடத்தொடங்கும் வாழ்விலும் உண்மையாக இருக்கிறது. நம் ஒருசில பகுதிகள் ஒரு ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்குள் இல்லாததால், முதலில் நாம் அவற்றை ஒரு ஒழுங்குமுறைக்குட்படுத்த வேண்டும். பின்னர் கொஞ்சகாலத்தில் அவை நாம் அனிச்சையாக செய்யும் காரியங்கள் போல, நம் அன்றாடவாழ்வில் ஒரு பகுதியாகிவிடும்.

நம் ஆண்டவரை இதைச் செய்ய அனுமதித்தால், பரிசுத்த ஆவியானது சுவாசிப்பது போன்றதான, இடைவிடாத வேண்டுதலுக்குள்ளாக நம்மை வழிநடத்திச்செல்லும் என நான் நம்புகிறேன். அவ்விதமாக நிகழும்போது நாம் நம் ஜெபத்தை தொடர்ச்சியாக ஏறெடுக்கமுடியும்.

அதன்பின், ஒவ்வொரு காலை நாம் எழும்போதும் “ஆண்டவரே! உமக்கு காலைவணக்கம்! உம்மை நான் மிகவும் நேசிக்கிறேன்!” என்று கூறலாம். காலையுணவு உண்ணும்போது

"தந்தையே! நீர் எனக்கு நல்லவராக இருக்கிறீர்!" எனலாம். வேலைபார்க்கத் தொடங்கும்போதும் "கர்த்தாவே, உமக்கு நன்றி! இன்றைக்கு எனக்காக நீர் செய்யவிருக்கும் எல்லா நன்மைகளுக்கும் நன்றி!" என்று கூறலாம்.

நாள்முழுவதும், காலையிலும், மாலையிலும் நம்மோடே இருப்பதற்காகவும், நமது பிரச்சனைகளில் உதவுவதற்காகவும், அவரை துதிப்பதும், தொழுவதும், நன்றிசொல்லுவதுமாக தேவனோடு தொடர்பிலேயே இருப்பதை தொடரலாம். பிற்பாடு, இரவில் இளைப்பாறச் செல்லும்முன் அவர் அந்நாளில் அருளிய அனைத்து ஆசிர்வாதங்களுக்காக நன்றிகூறவும், இரவில் மன அமைதியைத் தரும் இளைப்பாறுதலைக் கொடுக்கவும் கேட்கலாம்.

இப்போது பிசாசு, நாம் முறையாக அமர்ந்துகொண்டோ, முழங்காலிட்டோ செய்யாததாலும், பொதுவான தேவாலய சம்பிரதாயங்களுடன் செய்யாததாலும் நாம் செய்வது ஜெபமே ஆகாது என்றுகூற முற்படலாம். அந்நேரத்தில், அவனது பற்கள் உடையும்வண்ணம் அவனுக்கு ஓங்கி ஒரு குத்து விடுங்கள்! ஏனெனில், வேண்டுதலானது உடலிலிருந்தோ, வாயிலிருந்தோ புறப்படுவது அல்ல! அது ஆத்மாவிலிருந்தும், அறிவிலிருந்தும், ஆழ்ந்த இதயத்திலிருந்தும் புறப்படுவது!

எங்கே ஜெபம் உண்டோ அங்கே வல்லமை உண்டு!

## *ஜெபமே வல்லமை!*

...நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

யக்கோபு 5:16

தெளிந்த விசுவாசத்துடன், நம்பிக்கையுடன்கூடிய எளிமையான ஜெபம் வல்லமையானது. மனதுருகிச் செய்யும், இடைவிடாத ஜெபத்தைவிட வல்லமையுள்ளது வேறெதுவும் இல்லை.

நமது ஜெபவாழ்வில் பிசாசானவன் துன்பத்தைத் திணிப்பதற்குக் காரணம் என்னவெனில், நாம் ஜெபத்தில் உண்மையுள்ளவர்களாய் இருப்பதைத் தடுத்து, விசுவாசத்தில் வலுவிழக்கச் செய்வதே ஆகும். தொடர்ச்சியாக செய்யும் ஊக்கமான வேண்டுதலானது, அவனுடைய வழிகாட்டுதலையும், உள்வேலைகளையும் உடைத்துப்போட்டுவிட்டு, ஆண்டவரின் விருப்பத்தை இவ்வுலகில் நிறைவேற்றிவிடும் என்பது பிசாசுக்குத் தெரியும்.

நீங்களோ, நானோ எப்போதெல்லாம் நம் ஜெபவாழ்வைப் பற்றி குற்றவுணர்ச்சிக்குள்ளாவோமோ, அப்போது நம் ஜெபத்தின் மூலமாக நமது தேவவிசுவாசத்தை வெளிக்காட்டும் திறனை நழுவவிடத் தொடங்குகிறோம்.

இந்த வாழ்க்கையில் எதை செய்துமுடிப்பதற்காக கடவுள் நம்மை அழைத்தாரோ, அதைச் செய்துமுடிக்க அவர் நமது வேண்டுதலைக் கேட்கிறார், நமக்கு பதிலளிக்கிறார் என்று உறுதியாக அறிந்திருக்க வேண்டும். இதுதான் நம் வேண்டுதலை வல்லமையுள்ளதாகவும், அர்த்தச்செறிவு நிறைந்ததாகவும் ஆக்குகிறது.

ஆகவேதான், நாம் பயப்பட்டுக்கொண்டிருப்பதை உதறியெறிந்துவிட்டு, இடைவிடாது ஜெபிக்கத் தொடங்க வேண்டும்! தெளிந்த விசுவாசத்துடன்... எல்லாவகையான வேண்டுதல்களோடும்...

# 3

# ஜெபத்தின் வகைகள்

*நான் பிரதானமாய்ச் சொல்லுகிற அறிவுரையென்னவெனில், எல்லா மனிதருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.*

*1 தீமோத்தேயு 2:1*

# 3

# ஜெபத்தின் வகைகள்

*நான் பிரதானமாய்ச் சொல்லுகிற அறிவுரையென்னவெனில், எல்லா மனிதருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.*

*நாம் எல்லா பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள வாழ்க்கைநடத்தும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும், அவர் விருப்பமுமாயிருக்கிறது.*

*1 தீமோத்தேயு 2:1-3*

இந்த வசனத்தில் நாம் காண்பதுபோல, நாம் நமக்காகவும், பிறருக்காகவும் எல்லா ஜெபங்களையும் ஜெபிக்க வேண்டும்.

நாம் மனம் உணர்ந்து, இடைவிடாது ஜெபத்தில் நம்மை தக்கவைத்துக்கொள்ளும்போது நாம் ஜெபிக்க வேண்டிய வித்தியாசமான ஜெபங்களைக்குறித்துப் பார்ப்போம்.

## *ஒப்புவிப்பு ஜெபம்*

*உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.*

*சங்கீதம் 37:5*

முதலில் இருப்பது, நாம் நம்மையும், நம்முடைய வாழ்க்கையையும் தேவனிடம் ஒப்புவிக்கும் ஒப்புவிப்பு ஜெபம்! "*அவர் உங்களை* (அன்புடனும், விழிப்புடனும்) *விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம்* (எல்லா வருத்தங்களையும், மனபாரங்களையும்) *அவர்மேல் வைத்துவிடுங்கள்.*" என்று 1 பேதுரு 5:7ல் கூறியிருக்கிறபடி நாம் இந்த ஜெபத்தை செய்ய வேண்டும்.

நம்மை "அழித்துவிடுவேன்" என்று பயமுறுத்தி, திணறடிக்கும் பிரச்சனைகளை சந்திக்கும்போது, நாம் இவ்வாறாக ஜெபிக்க வேண்டும்: "ஆண்டவரே! இந்த கவலை எனும் பாரத்தை நான் சுமக்கப்போவதில்லை, அது என்னை துன்புறுத்தவும், உமக்கு சேவைசெய்வதை தடுக்கவும் விடப்போவதுமில்லை."

"பிதாவே! நீர் எதற்காக அழைத்தீரோ, அதை நான் பயந்தாலும் செய்ய, நீர் என்னை பெலப்படுத்தி

சக்தியளிக்கும்படி இப்பொழுது உம்மை நோக்கி ஜெபிக்கிறேன்!"

"இந்த இக்கட்டான சூழ்நிலையை உம்மீது வைக்கிறேன். தேவனே! சாத்தான் என்னிடம் சொல்ல முயற்சிக்கும் எந்தவிதமான கெட்ட, பாவமான, தீயவழியிலான காரியம் நடைபெறுவதாக இருந்தாலும் அது உம்முடைய பிரச்சனையே தவிர, என்னுடையது அல்ல! ஏனென்றால் நான், நீர் என்ன செய்யச்சொன்னீரோ அதைச் செய்யப்போகிறேன். மீதியானவற்றை உம்மிடம் விட்டுவிடுகிறேன்."

பயம் உண்டான நேரத்தில் நீங்களோ, நானோ ஜெபித்தால்... உடனேயோ, அப்புறமாகவோ தேவனுடைய வல்லமையால் அந்த பயத்தை வென்றிருப்பதை நாம் காணலாம்.

பெரும்பாலான சமயங்களில், நமக்கு மிகுந்த கஷ்டங்கள் வர பெரிய பயங்கள் காரணமாக இருப்பதில்லை. *திராட்சைத் தோட்டங்களைக் கெடுக்கும் குழிநரிகளையும், சிறுநரிகளையும்...* (உன்னதப்பாட்டு 2:15) போல, அவ்வப்போது தொந்தரவு செய்யும் சிறிய பயங்கள் நம்மை இரவும், பகலும் தாக்கி, நம்முடைய அன்றாட மகிழ்ச்சியை திருடிவிடுகின்றன.

ஆகையால், பயத்தின் முதல் அறிகுறியிலேயே, அது எத்தனை சிறியதாயிருந்தாலும் நாம் அதிலிருந்து வெளிவருவதோடு, இவ்வாறாக ஜெபிக்க வேண்டியதும் அவசியமாகும்: "ஆண்டவரே! நான் பயத்தில் வாழப்போவதில்லை. அதற்குப் பதிலாக, என்னுடைய வழிகளை உம்மிடம் ஒப்புவிக்கிறேன். என்னை துன்புறுத்தி,

உம்மில் நிறைவான வாழ்க்கை வாழ்வதை தடுக்கும், உமது மகிமைமிக்க சித்தமான திட்டத்தை நிறைவேற்றுவதைத் தடுக்கிற இக்காரியங்களை எதிர்கொண்டு, என்னை மீட்கும்படி உம்மிடம் கேட்கவே செய்வேன்.”

நாம் மனம் உணர்ந்து, ஊக்கமாக ஜெபித்தால், தேவன் நம்முடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் பெருமைப்படுத்தி நம்மை விடுவிக்க அவருடைய பங்கை செய்வார்.

## *அர்ப்பணிப்பு ஜெபம்*

*சகோதரரே! நீங்கள் உங்கள் சரீரங்களைப்*
*பரிசுத்தமும், தேவனுக்குப் விருப்பமுமான*
*ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று,*
*தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை*
*வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள்*
*செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.*

*ரோமர் 12:1*

தேவனுக்கு எதையேனும் நாம் மனமுவந்து அளிப்போமானால், அதுதான் சமர்ப்பணம் அல்லது அர்ப்பண ஜெபம் எனப்படுகிறது. இதில் அடிப்படையாக நாம் “ஆண்டவரே! நான் என்னுடைய பணம், நேரம், மனது என எதுவாக இருந்தாலும் அதைத் தருகிறேன்” என்று கூறவேண்டும்.

மேற்காணும் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல், தேவனுடைய பயன்பாட்டிற்கென்று நாம் நம்முடைய உடலையும், திறமைகளையும் ஒப்புவிப்பதே - சமர்ப்பிப்பதே

அர்ப்பணிப்பு என்றும், அதுவே *புத்தியுள்ள* ஆராதனை என்றும் கூறுகிறார்.

நாம் நம் பிள்ளைகளை தேவனுக்கென்று அர்ப்பணிக்கும்போது, நாம் "அவர்களை கர்த்தருக்கேற்ற அறிவுபுகட்டலிலும், போதனையிலும் வளர்ப்போம்" என்றும் வாக்களித்து சமர்ப்பணம் அல்லது அர்ப்பண ஜெபத்தை ஜெபிக்க வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையையும், நம்முடைய பணத்தையும், சொந்தமான பொருட்களையும், நம்முடைய மனதையும், உடலையும், நம்முடைய குழந்தைகளையும் கர்த்தருக்கென்று முழுமையாக அர்ப்பணிப்பதை போன்று, நாம் நம்முடைய சொற்களை முழுமையாக அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். இது நம்மை அடுத்தவகை ஜெபத்திற்கு அழைத்துச்செல்லும்.

## *துதி மற்றும் ஆராதனை ஜெபம்*

*ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.*

*எபிரெயர் 13:15*

துதி மற்றும் ஆராதனை என்றால் என்ன என்பதை நாம் எல்லோரும் அறிவோம் என்று நான் நினைக்கிறேன். துதி என்பது உண்மையாகவே தேவனுடைய நற்குணங்களை விவரித்துச் சொல்வதாகும். அது நமக்கு அவர் செய்திருக்கும் எல்லா நற்காரியங்களையும் கூறும் கதையாகும்.

ஆராதனை என்பது இயல்பாக தேவனை தொழுது, வணங்குவதாகும். அது அவருடைய தகுதியை அங்கீகரிப்பதாகும். அவர் யார், அவர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் ஒப்புக்கொண்டு செய்கிற ஒன்றாகும்.

அதனால்தான் எபிரெயர் புத்தகத்தை இயற்றியவர் நாம் தேவனை எப்போதும், எல்லாநேரங்களிலும் துதித்து ஆராதனை செய்யவேண்டும் என்று கூறுகிறார்.

நாம் முன்பு கண்டதுபோல, துதி, ஆராதனை ஜெபமானது நாம் சுவாசிப்பதைப்போல உள்ளும் - புறமுமாகவும், பகலும் —இரவுமாகவும், நொடிக்கு நொடி இருக்கவேண்டும்.

நாம் எப்பொழுதும் தேவனுக்கு நன்றியுடையவர்களாக, இடைவிடாது தொடர்ந்து அவரை ஏற்றுக்கொள்கிறவர்களாக, பாவத்தை அறிக்கையிடுகிறவர்களாக, அவருடைய பெயரை துதித்து ஆராதனை ஜெபத்தின்மூலம் மகிமைப் படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும்.

## *நன்றிசெலுத்தும் ஜெபம்*

*எல்லாவற்றிலேயும்* ***ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்****!*
*அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுக்குள்*
*உங்களைக் குறித்துத் தேவனுடைய*
*விருப்பமாயிருக்கிறது.*

*1 தெசலோனிக்கேயர் 5:18*

1 தெசலோனிக்கேயர் 5:17ல் அப்போஸ்தலனாகிய பவுல் இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று கூறியவுடனேயே 18ம் வசனத்தில் நம்முடைய சந்தர்ப்பம்,

சூழ்நிலை எப்படியிருந்தாலும், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்வது நமக்கு தேவனுடைய விருப்பமாயிருக்கிறது என்றும் கூறுகிறார்.

ஜெபம் நமக்கு வாழ்க்கையின் ஒரு பகுதியாவது போல, ஸ்தோத்திரஞ்செய்தலும் (நன்றிசெலுத்துதல்) வாழ்க்கையின் ஒரு பகுதியாக வேண்டும்.

தேவனுக்கு நன்றிசெலுத்துதல் ஒரு நாளுக்கொருமுறை எங்காவது ஓரிடத்தில் உட்கார்ந்து, அவர் நமக்குச் செய்த எல்லா நல்ல காரியங்களையும் யோசித்து, "நன்றி ஆண்டவரே!" என்று வெறுமனே சொல்வதாக இருக்கக்கூடாது.

தேவனுக்கு அதுதான் தேவை என்று நினைத்து நாம் இவ்வாறாக செய்வதெதுவும், சம்பிரதாயப்படியான வெறும் மதச்சடங்குதான்.

உண்மையான நன்றிகூறுதல் என்பது, அவர் கடவுளாக இருப்பதால் மட்டுமில்லாமல், அவர் நமக்காக செய்கிறவற்றிற்காகவும் நன்றியுள்ள இதயத்திலிருந்து துதியுடன் பொங்கிவரவேண்டும். அது ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கோ, வெற்றியை சம்பாதித்துக்கொள்வதற்கோ அல்லது எந்தத் தேவையையும் நிறைவேற்றிவைக்கவோ செய்யப்படுவது ஆகாது.

பிதாவாகிய தேவன் விரும்புகிற நன்றிசெலுத்தும் ஜெபம் எதுவெனில், நாம் ஆவியில் அனுபவிப்பதையும், அதன் உணர்வுகளையும் அப்படியே சொற்களில் வெளிப்படுத்த, நம்மில் அசைவாடும் பரிசுத்த ஆவியின் தூண்டுதலில் விளையும் மாசற்ற நன்றிகூறுதலையே ஆகும்.

உண்மை நன்றிகூறுதல் என்பதை சங்கீதக்காரன் வெளிப்படுத்தும் இந்த உணர்ச்சிவரிகளில் நாம் அறிந்துகொள்ளலாம்: "*கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்! அவர் கிருபை என்றுமுள்ளது.*" (சங்கீதம் 136:3)!

## *ஆவிக்குள் ஜெபம்*

*நீங்களோ, பிரியமானவர்களே உங்கள்*
*மகாபரிசுத்த விசுவாசத்தின்மேல் உங்களை*
*உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள்*
*ஜெபம்பண்ணி, காத்திருங்கள்*

*யூதா 20*

*நாம் ஏற்கனவே எபேசியா 6:18ல் பார்த்தப்படி நாம் எல்லாவிதமான ஜெபங்களை எல்லா நேரத்தில் மட்டும் சேய்யக் கூடாது, ஆனால் இங்கே யூதாவில் சொல்லப்பட்டிருப்பதைப் போன்று நம் ஜெபம் பரிசுத்த ஆவியில் இருக்கவேண்டும்.*

நமக்குள் இருக்கும் தேவனின் பரிசுத்த ஆவியே நம்மை ஜெபிக்கத் தூண்டி, நடத்திச்செல்கிறார். தாமதித்துக்கொண்டிருப்பதை விடுத்து, நாம் உணர்த்தப்படும் அந்த நேரத்தில் தானே, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு இணங்கிக் கொணடக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். இது எல்லாவிதமான ஜெபங்களையும் எல்லா நேரத்திலும் நாம் எங்கிருந்தாலும், என்ன செய்தாலும் செய்யக் கற்றுக் கொள்ளவேண்டும்.

ஆவிக்குரிய பழையதொருப் பாடலில் வரும், "ஒவ்வொருமுறை பரிசுத்த ஆவி என்னுள் அசைவாடுவதாக

உணரும்போதெல்லாம், நான் ஜெபிப்பேனே!" என்பதே நம் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

நாம்மட்டும் எந்தச் சமயத்திலும், எந்த இடத்திலும், ஜெபிக்க முடியும் என அறிந்துகொண்டால், அப்புறமாக, ஜெபிப்பதற்காக சரியான நேரமும், சரியான இடமும் அமையும்வரை காத்திருக்கவேண்டும் என நினைக்கமாட்டோம்.

## ஒருமனப்பட்டஜெபம்

*உங்களில் இருவர் தாங்கள்*
*வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக்*
*குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால்,*
*பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது*
*அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச்*
*சொல்லுகிறேன்.*

*ஏனெனில், இரண்டுபேராவது,*
*மூன்றுபேராவது என் பேரினாலே எங்கே*
*கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள்*
*நடுவிலே இருக்கிறேன் என்றார்*

*மத்தேயு 18:19,20*

மன ஒருமிப்பில் வல்லமை இருக்கிறது.

கர்த்தர் அவர்களோடே இருந்தால் ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்தி, இரண்டு பேர் பதினாயிரம் பேரை ஓட்டுவான் (உபாகமம் 32:30) என்று வேதாகமம் சொல்லுகிறது. ஆனால் அந்த வல்லமை, ஒருவரோடொருவர் ஒற்றுமையோடு இருந்து, தேவனோடு ஐக்கியப்படுபவர்களுக்கு மட்டுமே சாத்தியமாகும்.

*நிச்சயமாகவே,* எல்லாநேரங்களிலுமே நாம் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டோ, வாக்குவாதம் செய்துக்கொண்டோ இருந்துவிட்டு சில தேவைகளுக்காகவும், எதிர்பார்ப்புகளுக்காகவும் நாம் செய்யும் ஒருமனப்பட்டஜெபம் இன்னுமதிக வல்லமையுள்ளதாக இருக்கும் *என்று எதிர்பார்க்கக் கூடாது.* இதுவே 1 பேதுரு 3:7ல் நமக்கு "*அந்தப்படியே, புருஷர்களே! மனைவியானவள் பெலவீன பாண்டமாய் இருக்கிறபடியினால் உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக்கொள்கிறவர் களானபடியினால் அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.* (மற்றபடி நீங்கள் வல்லமை மிக்க முறையில் ஜெபிக்கமுடியாது)" என்று கூறப்பட்டுள்ளது.

அதேமாதிரி, ஒரு பிரசங்கியாரைக் குறித்து வாரம் முழுவதும் வம்புபேசி, குறைகூறிவிட்டு, முக்கியமான தன் சொந்தப் பிரச்சனைக்காக அவருடன் ஒருமனப்பட்டு ஜெபிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். *அது இயன்றதாக இருக்காது.*

அது ஏன் முடியாது? ஏனென்றால், ஏற்கனவே இங்கு நாம் ஒருவருக்கொருவர் இடையிலான ஒப்பந்தத்தை (மன ஒருமிப்பை) விட்டு வெளியே நிற்கிறோம். தேவனுடனுங்கூட...

தேவன் ஏன் ஒருமனப்பட்ட ஜெபத்தை பெருமைப்படுத்துகிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால், ஒருமனப்பட்டு நடப்பதும், வாழ்வதும்

எப்படிப்பட்டதொரு சவாலான காரியம் என்று அவர் நன்கு அறிவார். எனவேதான், அதைச் செய்பவர்களை அவர் மிகவும் மதிக்கிறார்.

நீங்களும், நானும் ஒருவரோடொருவர் ஒருமனப்பட்டு, நம் ஆண்டவரோடு ஐக்கியப்பட்டு ஜெபித்தால், அந்த ஜெபத்திற்குபின் இன்னுமதிகமான வல்லமையும், பயனும் கூட்டப்படும்.

## *ஐக்கியப்பட்டு, கூடி செய்யும் ஜெபம்*

*அங்கே இவர்களெல்லாரும், ...அவருடைய சகோதரருங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.*

*அப் 1:14*

இந்த வசனத்தில் நாம் காணும் வகையான ஐக்கியப்பட்டு கூடி ஜெபிக்கும் ஜெபமானது, அதிக வல்லமையுள்ளது.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் முழுவதுமாக தேவனுடைய மக்கள் “ஒத்திசைந்துவந்தார்கள், ஒத்திருந்தார்கள்” என்று கூறப்பட்டுள்ளது. (அப். 2:1,46; 4:24; 5:12; 15:25) (தமிழ் வேதாகமத்தில் இது ‘ஒருமனப்பட்டு’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது).

பிலிப்பியர் 2:2ல் அப்போஸ்தலனாகிய பவுலால் அறிவுறுத்தப்பட்டோம். “நீங்கள் ஏகசிந்தையும், ஏக அன்புள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய், ஒன்றையே சிந்தித்து, என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்.”

நாம் இந்த வசனத்தில் கவனம் செலுத்தி, நாம் ஒருவரோடொருவருடனும், தேவனுடனும் இசைந்திருந்தால், நாம் முதல் நூற்றாண்டு சீஷர்கள் அப்போஸ்தல நடபடிக்கையின் புத்தகத்தில் அனுபவித்த அதேவிதமான வல்லமையான பலனை அடையலாம்.

## *பரிந்துபேசும் ஜெபம்*

*நான் பிரதானமாய்ச் சொல்லுகிற*
*அறிவுரையென்னவெனில், எல்லா*
*மனிதருக்காகவும், விண்ணப்பங்களையும்,*
*ஜெபங்களையும், வேண்டுதல்களையும்,*
*ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.*
*1 தீமோத்தேயு 2:1*

யாராவது ஒருவருக்காக தேவனிடம் மன்றாடுதல் என்பது, அந்த நபருக்கும், தேவனுக்கும் இடையே, தேவனுடைய சிம்மாசனம் முன்நின்று அந்நபருக்காக பரிந்துபேசுவதாகும்.

ரோமர் 8:26,27ல் அப்போஸ்தலனாகிய பவுல் "பரிசுத்த ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக தேவசித்தபடி வேண்டுதல் செய்கிறார்" என்று கூறுகிறார்.

எபிரெயர் 7:25ல் "நமக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு கிறிஸ்து எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்" என்று வாசிக்கிறோம்.

இறுதியாக, பவுல் 1 தீமோ. 2:1ல் "எல்லா மனிதருக்காகவும், எங்கும், எப்பொழுதும் நாம் வேண்டுதல் பண்ணவேண்டும்" என்றும் கூறுகிறார்.

இந்த பூமியில் இயேசு கிறிஸ்து தொடங்கிவைத்த ஊழியத்தை நடத்திச்செல்ல "பிறருக்காகப் பரிந்துபேசி மன்றாடுவது" மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

## *மௌனஜெபம்*

*கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாக இருக்கக்கடவது.*

*ஆபகூக் 2:20*

இவ்விதமான ஜெபத்தை "கர்த்தரில் காத்திருத்தல்" என்றும் நான் அழைப்பேன்.

கர்த்தரில் காத்திருத்தலை குறித்த எல்லாம் தாவீதுக்கு நன்றாகவே தெரியும். இதை சங்கீதம் 27:4ல் நாம் அறியலாம். *"கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன். நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் உயிரோடிருக்கும் நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்"* என்று அவர் எழுதினார்.

கர்த்தருக்கு காத்திருத்தலை பயின்றுகொள்வது என்பது மிகமுக்கியமான ஒன்று. ஏனென்றால், எண்ணற்ற மக்கள் காத்திருத்தல், ஜெபத்தின் ஒரு பகுதி என்பதை புரிந்துகொள்வதில்லை. ஜெபம் வெறுமனே செய்யப்படும் ஒன்றல்ல! அது தேவனுக்கென்று காத்திருக்கும் மனநிலையாகும். ஜெபம் என்பது எல்லாநேரங்களிலும்

தேவனோடு பேசிப் கொண்டிருப்பதில்லை. அது அவரை கவனித்து கேட்பதுமாகும்.

## *விண்ணப்பஜெபம்*

*நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்,*
*எல்லாவற்றையுங்குறித்து உங்களை*
*ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும்*
*வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.*

*பிலிப். 4:6*

விண்ணப்பம் என்பது இயல்பாக வேண்டுகோள் விடுப்பதாகும். தேவன் நம் தேவைகளை சந்திக்கும்படி உதவும் என்ற யாரும் ஜெபிக்கக்கூடிய ஜெபத்தையே உயர்ந்த ஜெபம் என்று நான் அழைக்கிறேன். உதவும், தேவனே! தப்புவியும்! உதவும், தேவனே! உதவும்!

நான் இந்த ஜெபத்தை அதிகம் செய்கிறேன்.

சிலநேரங்களில் நடு இரவில் நான் பாத்ரூம் செல்ல எழும்புகிறேன். என்னில் எந்தத்தவறும் இல்லாதபோதும் நான் "உதவும், தேவனே! உதவும்!" என்று ஜெபிக்கிறேன்.

நான் பரிசுத்த ஆவியால் அந்த மாதிரி ஜெபிக்க நடத்தப்படுவதாக உணர்கிறேன்.

"உதவும், தேவனே!" என்பது ஒரு வல்லமையான ஜெபம்! உங்களாலும், என்னாலும் ஒன்றும் செய்ய முடியாதபோது, நாம் அந்த மாதிரியாக எப்பொழுதும் ஜெபிக்க முடியும்.

இன்னுமொரு இயல்பான, முக்கிய விண்ணப்ப ஜெபம்— "தேவனே! நீர் எனக்குத் தேவை!" என்பதாகும். நாம்

தன்னிச்சையாக காரியங்களை செய்ய முயற்சிப்பதை நிறுத்தினால், நீங்களும், நானும் பெரிய மாற்றங்கள் நம்மிடையே நிகழ்வதைக் காணலாம்.

நீதி 3:5-7ல் “உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,

உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

நீ உன்னை ஞானியென்று எண்ணாதே! கர்த்தருக்கு பயந்து, தீமையை விட்டுவிலகு” என்று கூறுகிறது.

உங்களால் தனித்து ஒன்றையும் செய்ய இயலாமல் கீழே விழும்போது கடவுளை நோக்கி ஓடாமல், அதற்கு முன்னதாகவே ஓடத் தயாராக இருங்கள். நீங்கள் முயற்சிக்கும் முன்பாகவே உங்களால் முடியாது என்று அறியுங்கள்! முழுமையாகக் கர்த்தரை சார்ந்திருங்கள்.

ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்: “தேவனே இதை நான் செய்ய முடியாது. ஆனால் உம்மால் முடியும். இதை என் மூலம் செய்யும். என் *நான் சார்ந்திருக்கிறேன், நம்பிக்கையாயிருக்கிறேன், என் முழு இருதயத்தோடும், மனதோடும் உம்மில் நம்பிக்கையாயிருக்கிறேன்.* உதவி செய்யும்! தேவனே! ஏனென்றால் நீர் எனக்குத் தேவை.”

வாழ்க்கையின் மிகமோசமான நிலைகளைக் கடக்க சிறிய விண்ணப்ப ஜெபம் ஒன்றே போதுமானது.

கடவுளை ஏற்றுக்கொள்ள ஒருசில நிமிடங்கள் மட்டுமே வேண்டும். ஆனால் நமது அன்றாட வாழ்க்கையில் எண்ணற்றத் தோல்விகளைத் தவிர்க்க, முக்கியமாக - தேவன்

இல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று நாம் உணரும்போது அது நமக்கு உதவும்.

தேவனே நான் உம்மைச் சார்ந்திருக்கிறேன். தயவுசெய்து எனக்கு உதவும் என்று நாம் கேட்கும்பொழுது, நாம் விண்ணப்ப ஜெபத்தை ஜெபித்திருக்கிறோம். அது வல்லமையுள்ளது. விண்ணப்ப ஜெபமானது குறைகளையும், தேவைகளையும் அல்லது விருப்பங்களையும் சந்திக்கச் செய்யும் வேண்டுகோளாகும்.

நம்மைக் குறித்ததான எதையும் தேவனிடம் பேச *நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.* அவர் நம்மை அதிகம் நேசிக்கிறார். நம்மைக் குறித்த எந்தக் காரியமாயிருந்தாலும் அவர் அக்கறையுள்ளவராக இருக்கிறார்.

## *முதலானதை முதலில் வை!*

*பின்பு, அவர்கள் பயணமாய் போகையில் அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பெயர் கொண்ட ஒரு பெண் அவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள்.*

*அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தை கேட்டுக்கொண்டிருந்தாள்.*

*மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து அவரிடத்தில் வந்து, “ஆண்டவரே! நான் தனியே*

*வேலைசெய்யும்படி என் சகோதரி என்னைவிட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்கு கவலையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும்!" என்றாள்.*

*இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக: மார்த்தாளே! மார்த்தாளே! நீ எண்ணற்ற காரியங்களைக்குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்.*

*லூக்கா 10:38-42*

நீங்கள் நினைக்கிறதைவிட ஒரு நல்ல ஜெபவாழ்க்கை இருக்கிறதென்று என்று நீங்கள் இப்பொழுது உணரத் தொடங்கியிருப்பீர்கள்! ஒவ்வொரு நாள் தொடக்கமும் தேவனிடம் நாம் ஜெபிக்க ஒரு குறித்த நேரமும், குறிப்பிட்ட இடமும் *குறிப்பாப ஒவ்வொரு நாள் தொடக்கத்திலும்* வேண்டுமென்று பார்த்தோம். உண்மையாக, எல்லாநேரமும் ஜெபத்தில் தரித்திருந்தால் மேன்மையான வல்லமை உண்டு.

வல்லமையுள்ள, பயனுள்ள ஜெபவாழ்க்கை வளர்ச்சியடைய இயல்பாக தேவனுடைய பிரசன்னத்தில் நேரங்களை செலவிட வேண்டும். கிறிஸ்துவின் சீஷர்களாக, நம்முடைய வாழ்க்கைமுறை அவரைச் சுற்றி அமைந்திருக்க வேண்டும்.

நீங்களும், நானும் தேவனுடைய பிரசன்னத்தில் நம் நாளை தொடங்கும்முன் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தால், மீதிநாள் முழுவதும் அந்த பிரசன்னத்தின் உணர்வு நம்மிடம்

தங்கியிருக்கும். நம் அன்றாட வாழ்க்கையில் நாம் அற்புதமான பலனைக் காணலாம்.

உங்களுக்கு நேரமில்லை என்று நீங்கள் நினைக்கலாம். இந்த விதியை (கட்டளைகள்) நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்ள: "*நான் வேலைபளு அதிகமாக அதிகரிக்க, அதிகரிக்க தேவனுடன் நான் அதிகமாக நேரம் செலவிடுவது அவசியமாக இருக்கிறது. ஏனெனில், நான் அதிகமாக வேலை செய்ய வேண்டுமானால் அவருடைய உதவி அதிகமாக எனக்குத் தேவை.*"

மார்த்தாளைப்போல் தேவனோடு நேரத்தை செலவிடாதபடி நீங்கள் அதிகவேலை உடையவர்கள் என்றால் நீங்கள் வெறுமனே வேலைப்பளு உள்ளவர்கள் என்பதேயாகும். நீங்களும் *மரியா*ளைப்போல சில காரியங்களைச் செய்யாமல் விட்டுவிட்டு, தேவனுடைய பாதத்தில் அமர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் அதைச் செய்வீர்களானால், பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்!

# 4

# இராஜ்யத்தின் திறவுகோல்கள்

*பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களை*
*நான் உனக்குத் தருவேன்.*

*மத்தேயு 16:19*

# 4

# இராஜ்யத்தின் திறவுகோல்கள்

*பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி:*

*மனுஷகுமாரனாகிய என்னை மக்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.*

*அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறுசிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும், சொல்லுகிறார்கள் என்றார்கள்.*

*அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.*

*சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.*

*மத்தேயு 16:13-16*

பேதுரு இயேசுவைக் குறித்து, கிறிஸ்து ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று கூறும்போது, அவன்

இதயத்திலுள்ள விசுவாசம் அவன் வாயினாலே வெளிப்படுத்தப்பட்டது.

“நீதியுண்டாக (நீதிமானாக்கப்பட்டு, தேவனுக்கென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட) இதயத்திலே விசுவாசிக்கப்படும் (கிறிஸ்துவை சார்ந்திரு, நம்பு) இரட்சிப்புண்டாக வாயினாலே (அவருடைய விசுவாசத்தை வெளிப்படையாக உறுதியாக பேசு) அறிக்கை பண்ணட்டும்.” என்று ரோமர் 10:10ல் கூறியிருப்பது போல, நம்முடைய இதயத்திலுள்ள விசுவாசம் நாம் பேசும் வார்த்தைகளால் நம் வாயிலிருந்து தீர்மானிக்கப்படுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவேதான், ஜெபம் மிகமுக்கியமானது. ஏனெனில், நாம் *காரியங்களைப் பற்றி வெளிப்படயாக பேசத் தொடங்கும் நாம் விசுவாசிக்கும் காரியங்களை நம் இருதயத்துக்குள் நிலைவரப்படுத்துகிறோம்.*

*அதனால்தான், ஜெபிக்கும் போது வேதவாக்கியங்களை அறிக்கைசெய்தல்* மிகமுக்கியமானது. நாம் அதைச் செய்யும்போது, சரீர ஆதிக்கத்திற்குட்பட்டு நாம் சொற்களினால் பேசும்போது நாம் ஆவிக்குரிய ஆதிக்கத்திலே *அதை நிலைவரப்படுத்துகிறோம். நாளடைவில்,* ஆவியில் தீர்மானிக்கப்பட்டது சரீரத்திலே வெளிப்படுத்தப்படுகிறது.

நீங்களும், நானும் தொடர்ந்து தேவனுடைய வசனங்களை அறிக்கையிட்டவண்ணம் இருக்க வேண்டும். நாம் சொல்லுவதெல்லாம், “தேவனே! நான் உம்மை விசுவாசிக்கிறேன். நீர் என்னை நேசித்ததால் உம்முடைய ஒரே பேரான குமாரன் இயேசுவை சிலுவையில் எனக்காக மரிக்க அனுப்பினீர் என்று விசுவாசிக்கிறேன்.”

“நீர் என்னை உம்முடைய பரிசுத்த ஆவியினால் நிறைத்தீர் என்று விசுவாசிக்கிறேன். நீர் என்னுடைய வாழ்க்கையில் ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறீர், அதை நிறைவேற்ற எனக்கு அதிகாரமளித்திருக்கிறீர் என்றும் விசுவாசிக்கிறேன்.”

“உம்முடைய அபிஷேகம் என்மேல் இருக்கிறது; அதனால் நோயாளிகள்மேல் *நான்* கைகளை வைக்கும் *போது* அவர்கள் குணமடை*வார்கள்*, பிசாசுகளைத் துரத்தும் *போது* அவை ஓடும் என்றும் நான் விசுவாசிக்கிறேன்.”

“உம்முடைய *வார்த்தையின்படி* நான் கைவைக்கும் யாவும் செழிப்பாகும்! வெற்றிகாணும்! என்று விசுவாசிக்கிறேன்.” என்றே இருக்கவேண்டும்.

தேவன் அவருடைய வசனங்களில் *நம்மைப் பற்றி* அவர் சொல்லியிருக்கிறபடி நாம் இதயத்தில் விசுவாசித்து, நம்முடைய வாயினால் அறிக்கைசெய்துகொண்டே இருக்கவேண்டும்.

நம்மைக் குறித்து ஒரு காரியத்தை சொல்லியிருக்கிறார். பயத்தின் ஆவியை அவர் நமக்குத் தரவில்லை. ஆனால் வல்லமையையும், அன்பையும், *தெளிந்த புத்தியையும்* அவர் நமக்குத் தந்திருக்கிறார். எனவே நாம் தொடர்ந்து, “நான் பயப்படேன்!” என்று அறிக்கை செய்தவண்ணம் இருக்கவேண்டும்.

## விசுவாசம் மேற்கொள்ளும்

*இயேசு அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான் மாம்சமும் இரத்தமும் (மனிதர்கள்) இதை உனக்கு*

*வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.*

*மேலும் நான் உனக்குச் சொல்கிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையை கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் (நரக சம்பந்தமான வல்லமைகள்) அதை வெற்றிகொள்வதில்லை.*

*மத்தேயு 16:17,18*

எந்த கல்லை அல்லது பாறையைக் குறித்து இயேசு இந்தப் பகுதியில் பேசுகிறார்? விசுவாசம் என்னும் பாறையைக் குறித்து அவர் பேசுகிறார். அவர் சீமோனாகிய பேதுருவிடம், அவன் காண்பித்த அந்த விசுவாசத்தின் மீது அவருடைய சபையை கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை வெற்றிகொள்வதில்லை (வசனம் 18) என்று கூறுகிறார்.

விசுவாசத்தில் நடக்கும் ஒரு நபருக்கு எதிராக பாதாளத்தில் வாசல் வெற்றிகொள்ளாது என்பது அதன் அர்த்தம்.

பயம் நரகத்திலிருந்து வரும்! அதனால்தான் யோவான், 1 யோவான் 4:18ல் “பயமானது வேதனையுள்ளது” என்று கூறுகிறார். ஆனால், பயம் விசுவாசத்தை எதிர்கொள்ளும்போது, பாதாளம் அதற்கு எதிராக வெற்றிகொள்ள முடியாது.

## இராஜ்யத்தின் திறவுகோல்கள்

*பரலோபராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது*

*எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கு,*
*ம் பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது*
*பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்.*

*மத்தேயு 16:19*

இயேசு இங்கு சொல்வது என்ன? "பரலோகத்தை *நடப்பவற்றை* வேண்டப்படும் எதையும் பூமியில் நிறைவேற்ற உங்களுக்கு வல்லமையையும், அதிகாரத்தையும் வழங்குகிறேன்" என்கிறார்.

மத்தேயு 6:10ல் இயேசு சீஷர்களுக்கு பிதாவிடம் ஏறெடுக்கும் *ஜெபத்தின் நிறைவு தான் இது,* "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று போதிக்கிறார்.

பின் மத்தேயு 18:18ல் "பூலோகத்திலே நீங்கள் எவற்றை கட்டுவீர்களோ, அவை பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீங்கள் எவற்றை கட்டவிழ்ப்பீர்களோ அவை பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்" என்றார்.

இங்கு இயேசு சொல்வது என்ன சொல்லுகிறார் என்றால், *பரலோகத்திலே அவருடைய சித்தம் மேற்கொள்வதைப் போல பூமியிலேயும் நடைபெற அவர்களுக்கு அவர் அளிக்கும் திறவுக் கோலை உபயோகிக்கத்தேவையான வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுப்பதாக அவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.*

அவர் பேதுருவிடமும், மற்ற சீஷர்களிடமும், நம்மிடமுங்கூட கொடுத்த அந்த திறவுகோல்கள்

யாவையெனில், நாம் பல்வேறு விதமான ஜெபங்கள் எனக் கற்றுக்கொண்டிருக்கும் இவையே!

## *ஊக்கமான ஜெபம் வல்லமைமிக்கது*

*நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.*

*எலியா என்பவர் நம்மைப்போல பாடுள்ள மனிதனாய் இருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான். அப்பொழுது மூன்று ஆண்டுகளும், ஆறு மாதங்களும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.*

*மறுபடியும் ஜெபம் பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.*

*யாக்கோபு 5:16-18*

எந்தவொரு அமைப்பிலும் யாருக்கு எதையும் செய்யும் உரிமையும், அதிகாரமும் இருக்கும்? சாவிக்கொத்தை தன்னோடு வைத்துக்கொண்டு, திறவுகோல்களை பொறுப்புடன் கையாள்பவரிடம் தானே? திறவுகோல்கள் என்ன செய்யும்? அவை பூட்டும், திறக்கும்! கட்டுவதும், கட்டவிழ்ப்பதுமானவற்றின் பொருளும் அதே பூட்டுவதும், திறப்பதுவுமே!

எடுத்துக்காட்டாக, நீங்களோ, நானோ யாரோ ஒருவருக்காக பரிந்துபேசும்போது, நாம் அந்த நபருடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தை திறந்துவிடுகிறோம். நாம்

நரகத்தின் வாசலைத் திறந்து, அவரை பிடித்திருக்கும் கட்டுகளிலிருந்து விடுவிக்கிறோம்.

அதே மாதிரியாக, நன்றியின் ஜெபத்தை தேவனுக்கு நாம் அர்ப்பணிக்கும்போது நம் சொந்தவாழ்விலும் ஆசீர்வாதத்தை திறந்துவிடுகிறோம்.

எனவே, அவ்வாறாக உங்களுக்கும், எனக்கும் ராஜ்யத்தின் திறவுகோல் கொடுக்கப்படுகிறது. அந்த ஜெபத்தின் திறவுகோல்களால், பரலோகத்தில் இருப்பதுபோல தேவனுடைய சித்தத்தை பூமியிலேயும் செய்ய நமக்கு அதிகாரமும், வல்லமையும், அனுமதியும் வழங்கப்படுகிறது.

என்னே ஒரு *சிலாக்கியம்!*

நம்முடைய ஜெபம் பயனுள்ளதாய் இல்லை என்று நம்மை நினைக்கவைத்து, சாத்தான் நம்மை ஏமாற்ற விரும்புவதில் வியப்பேதுமில்லை. அவனுடைய இருளின் இராஜ்யத்தை நாம் தொடர்ந்து வெற்றிகொள்ள விடாதபடி, ஜெபமென்னும் திறவுகோலை நாம் விட்டுவிட்டு ஓடும்படி செய்கிறான்.

உங்களது ஜெபவாழ்க்கை*யை குறைத்து மதிக்காதபடி* சாத்தானுக்கு *அனுமதி கொடுக்காதீர்.* தேவனை அங்கீகரிக்கத் தொடங்கி, அவரை ஜெபத்தில் அழைத்திடுங்கள்! எல்லாவகையான ஜெபத்திலும்... உங்களுடைய ஊக்கமான, இதயம் உணர்ந்த ஜெபம் வல்லமைமிக்கது என்று நம்புங்கள்! ஏனென்றால், பரிசுத்தமாய் வாழ்வதற்கோ அல்லது வல்லமையுடன் ஜெபிப்பதற்கோ உங்களது விசுவாசம், உங்கள் சொந்த திறமையின் மீதல்லாமல், அவர்மீது இருக்கிறது.

# வேண்டுதலான ஜெபம்

*நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்,*
*எல்லாவற்றையுங்குறித்து உங்களை*
*ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும்*
*வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.*

*பிலிப். 4:6*

விண்ணப்ப ஜெபத்தைக்குறித்து பேசும்போது நாம் இந்த வசனத்தைப் பார்த்தோம்.

விண்ணப்பம் என்பது என்ன? இந்த வசனத்தின்படி விண்ணப்பம் என்பது ஒரு திட்டமான வேண்டுகோள், வேண்டுகோளுக்கு மற்றொரு சொல் வேண்டுதல் என்பதாகும்.

வேண்டுதல் என்பது என்ன? சட்டபூர்வமாக ஒருவருக்குரியதை, அவர் பெற்றிராதபோது அதை தனக்கு மேலுள்ளவர்களிடம் கேட்பதற்கு வேண்டுதல் என்று பொருளாகும்.

இராணுவத்தில் ஓர் அதிகாரி தனக்குக் கீழேயுள்ள படைவீரர்களுக்கு வேண்டிய கருவிகளையும், தேவைகளையும் கேட்டுவாங்குவதை வேண்டுதல் எனலாம். இராணுவத்தில் பதவியிலுள்ள அதிகாரிக்கு அப்பொருட்கள் உரியவையே! ஆனாலும் அவற்றை பெற்றுக்கொள்ள அவர் ஒரு குறிப்பிட்ட வேண்டுதல் படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும். இந்தியாவின் இராணுவத்தில் இருப்பவரான அவருக்கு அந்த பொருள்ளைப் பெற்றுக்கொள்ள அவருக்கு

*உரிமையுண்டு, ஆனால் அதை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒரு உறுதியான வேண்டுதலை அவர் சமர்பிக்கவேண்டும்.*

நாம் ஜெபிக்கும்போது, தேவன் நமக்குத் தருவதற்கு எவற்றை எப்போது தரவேண்டுமென்று வைத்திருக்கிறாரோ அவற்றைப் பெற்றுக்கொள்ள, தேவை ஏற்படும்போது செய்யும் வேண்டுதலே வேண்டுதலான ஜெபமென ஆண்டவர் எனக்குக் காண்பித்திருக்கிறார்.

நம் அன்றாட வாழ்க்கையிலிருந்தே ஒரு எடுத்துக்காட்டு சொல்லுகிறேன், கேளுங்கள்! நீங்களோ, நானோ வங்கியில் நம் பணத்தை போட்டு வைத்திருக்கலாம். அது நம் பணமேயாயினும், நமக்குத் தேவையானபோது நாம் காசோலை எனப்படும் ஒரு வேண்டுதல் பத்திரத்தில் வேண்டுகோளுடன் கையொப்பமுமிட்டு, சமர்பித்து நம் பணத்தை நாமோ அல்லது நாம் அனுமதித்த மற்ற எவருமோ பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே முறை, அல்லவா?

அதேமாதிரியாகத்தான், என் கணவரிடம் எங்கள் ஊழியத்தின் நிதி அலுவல்களுக்குரிய மேலாளர்கள், தங்கள் துறைப்பணிகளுக்கு நிதி ஒதுக்கும்படி வேண்டும்போதும் நடக்கிறது. அவர் அவற்றிற்கெல்லாம் பணம் பகிர்ந்தளிக்கும்முன்பே, அவை எந்தெந்தப் பணிகளுக்கு எவ்வெவ்வளவு செலவழிக்கப்படுகிறது என அட்டவணையிட்ட வேண்டுதற்படிவங்கள் ஒப்படைக்க வேண்டும்.

அதுபோலவே, ஜெபம் என்பதும் என்னவெனில், நாம் கடவுளிடம் நம் அன்றாட வாழ்க்கையையும், ஊழியத்தையும் நடத்திச்செல்ல வேண்டி ஒப்புவிக்கும் ஒரு தெய்வீக வேண்டுதலே ஆகும்.

# இயேசுவின் பெயரில் கேளுங்கள்

*அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இதயம் மகிழும், உங்கள் மகிழ்ச்சியை ஒருவனும் உங்களிடத்தின்று எடுத்துப்போடமாட்டான்.*

*அந்தநாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.*

*யோவான் 16:22,23*

நம்மைக் குறித்து தேவனுக்கு எல்லாம் தெரியும் என்று வேதம் அறிவுறுத்துகிறது (சங்கீதம் 139:1-6). நாம் கேட்கும் முன்பே நமக்கு என்ன தேவை என்பதை அவர் அறிந்திருக்கிறார் (மத்தேயு 6:8,32). ஆனாலும், அவர் நமக்கு, கேட்கும்படி கட்டளை கொடுத்திருக்கிறார் (மத்தேயு 7:7).

நீங்களும், நானும் நம் இஷ்டப்படி, நாம் விரும்பிக் கேட்கிறதையெல்லாம் பெற்றுக்கொள்வதில்லை. “என்னிடம் நிறைய பணம் இருந்தால் நன்றாக இருக்குமே!” என்பதும், “இந்தத் தலைவலியிலிருந்து வெளிவர ஆசையாக இருக்கிறது.” என்பதும், “நான் பயமே இல்லாது வாழவிரும்புகிறேன்” என்பதும் தெய்வீக வேண்டுதல்களே அல்ல!

யாக்கோபு 1:5-8ல் நாம் வாசிக்கிறபடி, தனக்குத் தேவையானதை - தன்னிடம் குறைவுபட்டதை, தான் கேட்டதைக் குறித்து எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கிறவனுக்கு, அவன் வேண்டிக்கொண்டது தேவனுடைய ஆசீர்வாதத்தின் களஞ்சியத்திலிருந்து அபரிமிதமாக அருளப்படும்.

யோவான் 16ல் இயேசு அவருடைய சீஷர்களிடத்தில் சிலுவைக்கு செல்லும் முன்பாக பேசிய இப்பகுதியில், நாம் ஜெபிக்கும்போது விசுவாசிப்பதோடு மட்டுமல்லாது, அவருடைய நாமத்தினால் கேட்கவும் வேண்டும் என்பதையும் அவர் தெளிவுப்படுத்தினார்.

இயேசு இவ்வாறாக கூறியது நாம் எதைக்கூறினாலும் அவையெல்லாவற்றுக்கும் பின்னால் “இயேசுவின் நாமத்தில்” என்று தொடுத்து, தொடுத்து சொல்வது என்பது பொருளல்ல! நாம் எச்சரிக்கையுள்ளவர்களாய் மட்டும் இல்லாவிடில் நாம் அதிக மதப்பற்று உள்ளவர்களாகி, நம் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் “அல்லேலூயா!”, “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!” அல்லது “இயேசுவின் நாமத்தில் சொல்கிறேன்!” என்றே முடியும். அப்படி நடக்குமானால், அந்த வார்த்தைகள் வெகுவிரைவில் அதனுடைய உண்மையான அர்த்தத்தை இழந்துவிடும்.

இயேசு அதைக்குறித்து பேசவில்லை. அவர் கட்டளையிட்டபடி, பரலோகத்தில் இருப்பதைப்போல தேவனுடைய விருப்பத்தை இவ்வுலகத்திலும் கொண்டு வருவதற்கு அவருடைய நாமத்திலுள்ள *அதிகாரத்தை* பயன்படுத்துவதைப் *பற்றிரும் நம்மை அவ்வாறு செய்யச் சொல்வதைப் பற்றியும் கூறுகிறார்.* அவருடைய

குமாரனுடைய கையொப்பத்தின்மேல் நாம் அவருடைய இராஜ்யத்திற்குள் எவற்றைக் கொண்டுவர வேண்டுமோ அவற்றிற்குத் தேவையான வேண்டுதலை பிதாவாகிய தேவனிடம் ஒப்படைப்பதைக் குறித்துப் பேசுகிறார்.

நம்முடைய ஊழியத்தில், நம்மிடம் வேலை பார்ப்பவர்களுக்கு விடுமுறைகள்உள்ளன. அவை சட்டப்படி அவர்களுடையவை. ஆனாலும், *அது அவர்களுக்கு உரியதாக இருப்பினும்* அவர்கள் அந்த விடுமுறையை எந்தவித வேண்டுகோளோ, விண்ணப்பமோ இல்லாமல் எடுத்துகொள்ள முடியாது.

நீங்களும், நானும் அடையும்படி இயேசு கிறிஸ்து சிந்திய இரத்தத்தால் கிரயம் செலுத்தப்பட்டு, வாங்கப்பட்டிருக்கிற நம் பூர்வசொத்து பரலோகத்தில் நமக்காக சேமித்துவைக்கப்பட்டிருக்கிறது. (எபேசியர் 1:11,12) சட்டப்படியும், நியாயமாகவும் அது நம்முடையது. ஆனால், நாம் போதுமான வேண்டுதல்களை ஏறெடுத்திராததுதான் பிரச்சனையே!

எங்கள் ஊழியத்தில் வேலைபார்க்கும் ஒருவர் டேவ்விடம் விடுமுறைக்கான ஒரு வேண்டுகோள் விண்ணப்பத்தை முன்வைத்திருந்த சில நாட்களாகியும் அந்த விண்ணப்பம் ஒப்புதல் பெறாதிருந்தால், அவர் நேரடியாக டேவ்விடம் வந்து, “என் விண்ணப்பத்தை தவறவிட்டுவிட்டீர்களா? நியாயமாக எனக்குக் கிடைக்க வேண்டிய அது, எனக்கு எப்போது கிடைக்கும்?” என்று கேட்பார்.

நீங்களும், நானும் இயேசுவின் நாமத்தில் தேவனிடம் வேண்டுதலை விசுவாசத்தில் ஒப்புவித்து, கேட்டவற்றை நாம்

பெற்றுக்கொள்ளாதபோது, நாம் பிதாவிடம் நேரடியாக போய் "பிதாவே, நீர் என்னுடைய வேண்டுதலை மறக்கவில்லை, அல்லவா?" என்று கேட்க நமக்கு எல்லா உரிமையும் உள்ளது. அது அகம்பாவம் அல்ல... விசுவாசம்! நாம் அவர் உண்மையுள்ளவர் என்று விசுவாசித்து, அவர்தம் வாக்கை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்ப்பதைக் காட்டுவதால், அது உண்மையில் அவரைப் பெருமைப்படுத்தவே செய்கிறது.

## *இயேசுவின் பெயரை பயன்படுத்துங்கள்!*

*இதுவரைக்கும் நீங்கள் என் பெயரில் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் இப்பொழுது கேளுங்கள்! கேட்டுக்கொண்டேயிருங்கள்! நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்! அவ்வாறாக உங்கள் மகிழ்ச்சி நிறைவாகிவிடும்.*

*யோவான் 16:24*

இயேசு அவருடைய நாமத்தினால் கேட்கும்படி நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். அதனால் நம் மகிழ்ச்சி நிறைவாய் இருக்கும்படி நாம் பெற்றுக்கொள்ளக்கூடும்.

விசுவாசிகளுடைய வாழ்க்கையில் இன்று மகிழ்ச்சி குறைவாக காணப்படுவதற்கு முக்கியமான ஒரு காரணம் ஜெபக்குறைவே என்று நான் நினைக்கிறேன். ஜெபம் குறைந்து காணப்படுவதற்கான காரணங்களுள் ஒன்று தேவனுடைய பிள்ளைகள் அவரிடம் எதற்காக ஜெபிக்கிறார்களோ, அதை தேவன் செய்யும்படி அவர்கள் மூலமாகவும், அவர்களுக்காகவும் செய்யும்படி அவரிடம்

கேட்காமல், தங்கள் (சரீரப் பிரகாரமாக) மாம்சத்திலே செய்வதற்கு முயற்சிப்பது என்ற உண்மையே காரணமாகும்.

மரணத்திலிருந்து அவர் உயிர்த்தெழுந்தபின் காரியங்கள் யாவும் வித்தியாசமாய் இருக்கும் என்று இயேசு தன் சீஷருக்கு சொன்னார். அவருடைய மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் முன் ஒருபோதும் அனுபவித்திராத புதிய வல்லமையும், அதிகாரமும் அவர்களுக்கு இருக்கும்மென்று அவர்களிடத்தில் அவர் சொன்னார்.

அவர் குறிப்பிட்ட அந்த நேரம் வந்தபோது, அவர் அவர்களிடத்தில் "நீங்கள் என்னிடம் ஒன்றும் கேட்க வேண்டாம்! நீங்கள் நேராக பிதாவிடம் செல்ல முடியும், என் நாமத்தினால் எதை கேட்பீர்களோ அதை அவர் உங்களுக்குத் தருவார்" என்றார்.

இயேசுவின் நாமத்தில் கேளுங்கள் என்பதன் பொருள் என்ன?

24ஆம் வசனத்தின்படி, இயேசுவின் நாமத்தில் நாம் ஜெபிப்பது, பிதாவிடம் இயேசுவை இயேசுவாக அறிவிப்பதாகும்.

ஜெபவல்லமையில் நாம் (தரங்குன்றி) வலிமையற்று, இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் நாம் யாரென்று அவருக்கு அறிமுகப்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறோம். அதனால் ஏற்படும் பிரச்சனை என்னவென்றால், எந்த விதத்திலாவது அவருக்கு ஏற்றவிதத்தில் செயல்படாமல்போனால், அதற்கப்புறம் நாம் அவருக்கு அளிக்கக்கூடியது ஒன்றுமில்லை என்று நினைத்துக் கொள்கிறோம்.

தேவனுடைய பார்வையில் நம்முடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 64:6). இயேசுவின் இரத்தம் தவிர வேறு எதையும் நீங்களும், நானும் தேவனுக்கு அளிக்க முடியாது.

எனவே தான், என்னுடைய “வார்த்தை, நாமம், இரத்தம்” என்ற புத்தகத்தால் நான் அதிக ஊக்கமடைந்தேன். அதில் நான் ஆராய்ந்த உண்மைகளை வெளியிட்டுள்ளேன்.

இயேசுவின் இரத்தத்தினால் மூடப்பட்டு நீங்களும், நானும் தேவனுடைய கிருபையின் சிம்மாசனத்தின் முன் வந்து விசவாசத்தோடு அவருடைய வார்த்தையின்படி அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கேட்டால், நாம் அவரிடம் கேட்ட விண்ணப்பங்கள் இருக்கின்றன என்றறிய முடியும். ஏனென்றால், நாம் முழுமையடைந்தவர்கள் என்பதாலோ, சுயமான வலிமை படைத்தவர்கள் என்பதாலோ அல்ல! தேவன் நமக்கு வாக்களித்திருப்பதாலும் அல்ல! அவர் நம்மை நேசிப்பதாலும், நாம் என்ன செய்ய வேண்டுமென்று அழைத்தாரோ அதைச் செய்ய நமக்கு தேவையான எல்லாவற்றையும் நமக்குக் கொடுக்க விரும்புகிறார் என்பதாலேயே!

இயேசுவின் நாமத்தில் வல்லமை உள்ளது. அதைக் குறிப்பிட்டு சொல்லப்போனால், அது வானத்திலும், பூமியிலும், பூமிக்கடியிலும் உள்ள முழங்கால்கள் அத்தனையும் தாழ்பணிய வேண்டிய ஒன்றாகும். (பிலிப்பியர் 2:10) அந்த நாமத்தின் வல்லமையால் நீங்களும் நானும், கரங்களை நோயாளிகள்மீது வைக்க, அவர்கள் குணமடைவார்கள்; பிசாசுகளைத் துரத்தவும், அவை ஓடிப்போகும். *நாமும் கூட இயேசு செய்த அதே*

*காரியங்களையும் அதைவிட பெரிய காரியங்களையும் தேவனுடைய மகிமைக்காக செய்ய இயலும்.* (மாற்கு 16:17,18; யோவான் 14:12).

இயேசு தம் இரத்தத்தை சிந்தி, நமக்காக ஒரு மகிமைமிக்க சொத்தை விலைகொடுத்து வாங்கியிருக்கிறார். இப்பொழுது நாம் அவருடைய உடன் சுதந்திரர்கள்! (ரோமர் 8:17) அவருடைய தியாகத்தினால் அவர் சம்பாதித்த யாவும், நமக்காக பரலோகத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த சேமிப்புக் களஞ்சியத்திற்கு நம்மிடம் திறவுகோல்கள் உள்ளன. அந்த திறவுகோல்கள் ஜெபமே!

நாம் பயத்துடனும், குறைபாட்டுடனும் வாழத் தேவையில்லை. பரலோகத்தின் கதவுகள் திறந்து, தேவனுடைய மகிமையான ஆசீர்வாதங்கள் நம்மீது பொழியும்படிக்கு, அந்தத் திறவுகோலை பயன்படுத்தத் தொடங்குங்கள்! அதனால், பரலோகத்தில் செய்யப் படுகிறதுபோல, அவருடைய தெய்வீக சித்தம் பூலோகத்திலும் செய்யப்படட்டும்! அதனால் நம்முடைய மகிழ்ச்சி நிறைவாக்கப்படட்டும்!

# முடிவுரை

பயம் தேவனிடமிருந்து வருவதில்லை.

பயம் சாத்தானிடமிருந்து வருகிறது. ஒரு கிறிஸ்தவனுக்கு பயத்தைக் குறித்து ஒத்துக்கொள்ளக் கூடிய ஒரே கருத்து "பயம் தேவனிடமிருந்து வருவதல்ல! நான் அதனுடன் ஒத்துப்போகமாட்டேன் அல்லது அது என் வாழ்க்கையை கட்டுப்படுத்தவிடமாட்டேன். நரகத்திலிருந்து என்னை துன்புறுத்த அனுப்பப்பட்ட அந்த ஆவியை - பயத்தை நான் முறியடிப்பேன்" என அறிக்கையிடுவதேயாகும்.

உண்மையான தலையாயவர், இயேசு கிறிஸ்துவின் தலைமையின்கீழ் தேவனுடைய பிள்ளைகள் கூடிவருவதை தடுக்க சாத்தான் பயன்படுத்தும் ஆவியே பயம் என்றுதான் நான் அடிக்கடி சொல்லுவேன்.

கட்டுகளிலிருந்து நம்மை விடுவித்து விடுதலை அளிக்க, ஆண்டவர் நம்மோடு நிதானமாக செயல்படுகிறார் என்று நான் நம்புகிறேன். வேதம் முழுவதும் "பயப்படாதே!" என்று

சொல்லப் பட்டிருக்கிறது. முன்பு குறிப்பிட்டபடி, என் சொந்த வாழ்க்கையில் நடந்தவை என்னை, "பயப்படாதே" என்பது "ஓடிப்போகாதே!" என்று புரிந்துகொள்ளும்படி வழிநடத்தியது.

'முன்னேறுங்கள்!' என்று நான் உங்களைத் தூண்டுகிறேன்; தேவைப்பட்டால் 'பயந்தும் செய்யுங்கள்!' என்றும் சொல்கிறேன், உற்சாகப் படுத்துகிறேன். இப்படியும் சொல்லலாம் அல்லவா?

பயத்தை விட்டு ஓடாதீர்கள்! அதற்குப் பதிலாக, ஜெபத்தாலும், விசுவாசத்தாலும் அதை எதிர்கொண்டு, முறியடியுங்கள்!

மறந்துவிடாது நினைவில்கொள்ளுங்கள்! தேவன் உங்களை உங்கள் எல்லா பயத்திலிருந்தும் விடுவிக்கவே விரும்புகிறார்!

பயம் (FEAR) என்பது

F - False

E - Evidence

A - Appearing

R - Real

{*மெய்யானதைப் போலவே தோன்றும் பெய்சாட்சி* (*மாயை*)}

# பகுதி 2

## வேதவசனங்கள்

# பயத்தை எதிர்கொள்வதற்கான வேதவசனங்கள்

பயப்படாதிருங்கள்! நீங்கள் (நம்பிக்கையுடன், வலுவான, கலக்கமின்றி) நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்...

யாத்திராகமம் 14:13

இதோ, உன் தேவனாகிய கர்த்தர் அந்த தேசத்தை உனக்கு முன்பாக வைத்திருக்கிறார்; உன் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியே, நீ போய் அதை சுதந்தரித்துக்கொள்; பயப்படாமலும், கலங்காமலும் இரு என்றேன்.

உபாகமம் 1:21

நீங்கள் பலங்கொண்டு திடமனதாய் இருங்கள், அவர்களுக்கு பயப்படவும், திகைக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னுடனேகூட வருகிறார், அவர் உன்னை

*விட்டுவிலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை.*

*உபாகமம் 31:6*

*நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.*

*யோசுவா 1:9*

*நீ பயப்படாதே! (பயப்படுவதற்கு ஒன்றுமேயில்லை) நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே! நான் உன் தேவன்! நான் உன்னை பலப்படுத்தி உனக்கு உதவுவேன்; என் நீதியின் வலது (வெற்றிக்) கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.*

*உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து: பயப்படாதே! நான் உன் வலது கையைப் பிடித்து: பயப்படாதே! நான் உனக்கு துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.*

*ஏசாயா 41:10, 13*

*இப்பொழுதும் யாக்கோபே! உன்னைப் படைத்தவரும், இஸ்ரவேலே! உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; பயப்படாதே! உன்னை (அடிமையாக விட்டுவைக்காமல், உனக்குப் பணயப் பிராயசித்தம் செலுத்தி) மீட்டுக்கொண்டேன். உன்னை பெயர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.*

*நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவை உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜுவாலை உன்பேரில் பற்றாது.*

*ஏசாயா 43:1,2*

*அந்தப்படி திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே! என்று கூப்பிடவைக்கிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.*

*ரோமர் 8:15*

*நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது. இதுவும் தேவனுடைய செயலே!*

*பிலிப்பியர் 1:28*

*நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.*

*அப்பொழுது, எல்லா அறிவுக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.*

*பிலிப்பியர் 4:6,7*

*தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், வலிமையும், அன்பும், தெளிந்த அறிவுமுள்ள ஆவியையேக் கொடுத்திருக்கிறார்*

*2 தீமோத்தேயு 1:7*

*நீங்கள் பணத்தாசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவற்றை போதுமென்று எண்ணுங்கள்! நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே!*

*அதனாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனிதன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே!*

*எபிரெயர் 13:5,6*

*அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.*

*1 யோவான் 4:18*

# பயத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஜெபம்

ஆண்டவரே! பயத்திலிருந்து என்னை விடுவியும்! நான் துணிச்சலுடன் இருக்கவும், பரிசுத்தத்தின் திடத்தன்மையைக் கொண்டிருக்கவும் எனக்கு உதவும்!

நான் பயப்படாதிருக்கவும், முன்னேறிச் சென்று, எனக்காக நீர் வைத்திருக்கிற உமது விருப்பமானவற்றை சுதந்தரித்துக்கொள்ளவும் எனக்கு உதவும்.

உன்னதமான, தூய்மையான அன்பு (என்மீதான உமது அன்பு) எல்லாவிதமான பயங்களையும் புறம்பே துரத்திவிடும், ஆதலால் நீர் எந்த அளவிற்கு என்னை நேசிக்கிறீர் என நான் அறிந்து, உணர்ந்துகொள்ள எனக்கு உதவும்!

இயேசுவின் உன்னத நாமத்தில்... ஆமென்!

# தேவனோடு தனிப்பட்ட உறவு வைத்துக்கொள்வதற்கான ஜெபம்

மற்ற எல்லாவற்றையும்விட இயேசு உங்களை இரட்சிக்கவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பவும் விரும்புகிறார். நீங்கள் சமாதானபிரபுவாகிய இயேசுவை உங்கள் ஆண்டவராகவும், மீட்பராகவும் இதுவரை ஒருபோதும் அழைத்திராவிட்டால், நீங்கள் அவ்வாறு செய்யும்படி இப்பொழுது நான் உங்களை அழைக்கிறேன். கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுங்கள். நீங்கள் இதை முழுமனதோடு உண்மையாகவே செய்தால், கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு புதுவாழ்க்கையை உணருவீர்கள்.

*பிதாவே,*

*நீர் உலகத்தை இவ்வளவாக நேசித்தீர், உம்முடைய ஒரே குமாரனை எங்களுடைய பாவங்களுக்காக மரிக்கக் கொடுத்தீர், அதனால் அவருக்குள் விசுவாசிக்கிறவன் எவனும் அழிந்துபோகாமல், நித்தியவாழ்வைப் பெறுகிறான்.*

*உம்மிடத்திலிருந்துப் பெற்ற வெகுமதியான, விசுவாசத்தின் மூலமாய் கிருபையாக இரட்சிக்கப்பட்டோம் என்று*

*உம்முடைய வசனம் சொல்கிறது. நாங்கள் இரட்சிப்படைய எங்களால் எதுவும் செய்ய இயலாது.*

*உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே உலகத்தின் மீட்பர் என்று நான் நம்பி, என் வாயினால் அறிக்கையிடுகிறேன். என்னுடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, அதற்கான கிரயத்தை செலுத்தி சிலுவையில் எனக்காக மரித்தார். நீர் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினீர் என்று என் இதயத்தில் விசுவாசிக்கிறேன்.*

*நீர், என்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். நான் இயேசுவை என்னுடைய ஆண்டவராக அறிக்கையிடுகிறேன். உம்முடைய வசனத்தின்படி நான் இரட்சிக்கப்பட்டேன், உம்முடன் நித்தியத்தைக் கழிப்பேன். பிதாவே! உமக்கு நன்றி!*

*நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

யோவான் 3:16; எபேசியர் 2:8,9 ரோமர் 10:9,10; 1 கொரிந்தியர் 15:3,4; 1 யோவான் 1:9; 4:14-16, 5:1,12,13 பார்க்கவும்.

# ஆசிரியரைப் பற்றி

ஜாய்ஸ் மேயர் அவர்கள் உலகப்பிரசித்திப்பெற்ற வேதாகமப் போதகர்களுள் ஒருவராவார். நியூயார்க் டைம்ஸின் சிறப்பாக விற்பனையாகும் ஆசிரியரான அவருடையப் புத்தகங்கள், பலலட்சக்கணக்கானவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கையையும், மீட்பையும் கண்டடைய உதவியுள்ளன. ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் மூலம் பல தலைப்புகளைப் பற்றி அவர் போதிக்கின்றார், அதில் மனம், வாய், மன நிலை, மனப்பான்மை ஆகியவற்றிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர் போதிக்கின்றார். அவருடைய வெளிப்படையான உரையாடும் நடையானது, அவருடைய தனிப்பட்ட அனுபவங்களை வெளிப்படையாகவும், நடைமுறைக்கேற்றப்படியாகவும் பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது.இதனால் கேட்கிறவர்கள் அவர் என்ன வாழ்க்கையில் கற்றுக் கொண்டாரோஅதை அவர்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த ஏதுவுண்டாகிறது. ஜாய்ஸ் அவர்கள் சுமார் 100 புத்தகங்களை எழுதியுள்ளார். அவை 100 மொழிகளில் மொழிப்பெயர்கப்பட்டுள்ளது. அவர் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ பன்னிரெண்டு உலகளாவிய மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகளை நடத்துகின்றார், இதன்மூலம் மக்கள் தங்கள் அனுதின வாழ்க்கையை அனுபவிக்கப் போதிக்கின்றார். கடந்த 30 ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடைபெறும் அவருடைய பெண்கள் கருத்தரங்குக்கு சுமார் 20 லட்சம் பெண்கள் உலகெங்கிலுமிருந்து கலந்துக் கொள்கின்றனர். கஷ்டப்படும் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஜாய்ஸின் வாஞ்சை தான் "நம்பிக்கையின் கரம்" என்ற தரிசனத்திற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கிறது, இது ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் ஊழியப் பணி கிளையாகும், இது அவருடைய ஊராகிய செயின்ட் லூயிலும் உலகின் பல்வேறு இடங்களிலும் நடைபெறும் அருட்பணிகளை தாங்கிவருகின்றது.

To contact the author in the United States, please write:
Joyce Meyer Ministries
P.O. Box 655,
Fenton, Missouri 63026
or call: (636) 349-0303
or log on to: www.joycemeyer.org

To contact the author in India, please write:
Joyce Meyer Ministries
Nanakramguda,
Hyderabad - 500 008
or call: 2300 6777
or log on to: www.jmmindia.org